பக்கங்கள்:-21

# காலை முரசு


முழக்கம்: 01 | வள்ளுவர் ஆண்டு 2054 | ஐப்பசி 25 | சனிக்கிழமை | 11.11.2023 | அதிர்வு 102


## கம்பளையில் பெண் ஒருவர் படுகொலை!

(கம்பளை நிருபர்)

வீடொன்றில் இருந்து பெண் ஒருவர் கொலை செய்யப்பட்டு கட்டிலுக்கு அடியில் அவரின் சடலம் மறைத்து 06

# கொக்குத்தொடுவாய் மனிதப் புதைகுழி ரேடார் மூலம் ஆய்வு



**நீதிமன்றிடம் அனுமதி கோரி விண்ணப்பம்**
**அகழ்வுப் பணி மீண்டும் 20 இல் தொடங்கும்**

(ந.லோகதயாளன்)

முல்லைத்தீவு மாவட்டம், கொக்குத்தொடுவாய் மனிதப் புதைகுழியில் எதுவரை உடல்கள் புதைக்கப்பட்டுள்ளன என்பதனைக் கண்டறிய ரேடாரைப் பயன்படுத்த நீதிமன்றத்திடம் விண்ணப்பிக்கப்பட்டுள்ளது. 06

# சர்வதேச சமூகத்துடன் உறவுகளை விரிவுபடுத்துவதே எமது நோக்கம்




## ஜனாதிபதி ரணில் தெரிவிப்பு

இந்தியா மற்றும் பிராந்திய பரந்த பொருளாதார சங்கத்தின் நாடுகளுடன் பொருளாதார ஒத்துழைப்பை ஏற்படுத்துவதிலும் ஐரோப்பிய ஒன்றியத்துடனான உறவுகளைப் பலப்படுத்துவதிலும் இலங்கை கவனம் செலுத்துகின்றது என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

மறைந்த பிரதமர் டி.எஸ்.சேனாநாயக்கவின் ஆட்சிக் காலம் முதல் சிறிமாவோ பண்டாரநாயக்கவின் ஆட்சிக்காலம் வரையிலான காலம் இலங்கையின்

வெளிவிவகாரக் கொள்கையின் பொற்காலம் எனக் 08

## கிரிக்கெட் நிர்வாகத்தை கலைப்பதா? நீதிமன்றமே தீர்மானிக்க வேண்டும்

**இப்படிக் கூறுகின்றார் நீதி அமைச்சர்**



இலங்கை கிரிக்கெட் நிர்வாகத்தைக் கலைப்பது தொடர்பில் நீதிமன்றமே தீர்மானிக்க வேண்டும் என்று நீதி அமைச்சர் கலாநிதி விஜயதாஸ ராஜபக்ஷ தெரிவித்தார்.

கிரிக்கெட் நிர்வாகத்தைக் கலைப்பது தொடர்பில் நாடாளுமன்றத்தில் பிரேரணை நிறைவேற்றப்பட்டாலும், நீதிமன்றமே அது தொடர்பான 06

## பருத்தித்துறையில் வயோதிபப் பெண் மயங்கி உயிரிழப்பு

(எஸ்.நிதர்ஷன்)

நலன்புரிக் கொடுப்பனவைப் பெறச் சென்ற வயோதிபப் பெண் ஒருவர் திடீர் சுகவீனமுற்று மயங்கி விழுந்து உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் யாழ். பருத்தித்துறையில் இடம்பெற்றுள்ளது.

பருத்தித்துறை, கற்கோவளம் பகுதியைச் சேர்ந்த அமிர்தலிங்கம் கமலேஸ்வரி (வயது 64) என்பவரே உயிரிழந்துள்ளார். 06

## ஐ.சி.சி. உறுப்புரிமையிலிருந்து இடைநிறுத்தப்பட்டது கிரிக்கெட்

(விரிவான செய்தி 9ஆம் பக்கத்தில்)







ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் முன்னெடுப்பில் இடம்பெற்ற ஒரு லட்சம் பேருக்கான வேலைவாய்ப்புத் திட்டம் வடக்கு – கிழக்கில் நடைமுறைப்படுத்தப்படாமல் இடை நிறுத்தப்பட்டதும், தெற்கில் இத்திட்டத்தின் கீழ் நியமனம் பெறுவோர் வடக்கே உள்ள இடங்களுக்குப் பணியாற்ற அனுப்பப்படுகின்றமையும், இதனால் வடக்கில் கடும் அதிருப்தி நிலவி வருகின்றமையும் தெரிந்தவையே. 06

# மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகார சபைக்கு பதில் பிரதம நிறைவேற்று அதிகாரி நியமனம்




தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகார சபைக்கு பதில் பிரதம நிறைவேற்று அதிகாரி ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார்.

தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகார சபையின் பிரதம நிறைவேற்று அதிகாரியாக செயற்பட்ட மருத்துவர் விஜித்த குணசேகர அந்தப் பதவியிலிருந்து நீக்கப்பட்டதன் பின்னரே இந்த நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகார சபையின் புதிய தலைவராக சிரேஷ்ட இரசாயனவியல் நிபுணர் டி.டி.புலத்சிங்கள நியமிக்கப்பட்டுள்ளார்.

தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகார சபையின் பணிப்பாளர் குழாமினால் இந்த நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் நாள்களில், தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகார சபைக்கு நிரந்தர தலைவர் ஒருவர் நியமிக்கப்படவுள்ளார் எனத் தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகார சபையின் பணிப்பாளர் குழாமின் தலைவர் விசேட வைத்திய நிபுணர் ஆனந்த விஜேவிக்கிரம தெரிவித்தார்.

தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகார சபையின் பிரதான நிறைவேற்று அதிகாரியாக செயற்பட்ட வைத்தியர் விஜித்த குணசேகர சமீபத்தில் அந்த பொறுப்பிலிருந்து நீக்கப்பட்டார்.

தரமற்ற மருந்துகள் இறக்குமதி செய்யப்பட்டமை தொடர்பில் தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகார சபையின் தலைவர், பிரதம நிறைவேற்று அதிகாரிகளுக்கு எதிராகக் கடந்த காலங்களில் பல்வேறு குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டன.

எவ்வாறாயினும், பிரதம நிறைவேற்று அதிகாரியாகச் செயற்பட்ட மருத்துவர் விஜித் குணசேகர மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகார சபையின் ஆவணங்களை அழித்தார் என சுகாதாரத் தரப்பினர் தொடர்ச்சியாகக் குற்றச்சாட்டுகளை முன்வைத்திருந்தனர்.

இதேவேளை, தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகார சபையின் முன்னாள் பிரதம நிறைவேற்று அதிகாரி தற்போது தேசிய வைத்திய பரிசோதனை நிறுவனத்தின் பணிப்பாளராக நியமிக்கப்பட்டுள்ளார் என இன்று நடைபெற்ற ஊடக சந்திப்பில் சுகாதார தொழிற்சங்கங்கள் குற்றஞ்சாட்டின.

# பருவ மழையை எதிர் கொள்வது குறித்து வவுனியாவில் அதிகாரிகள் ஆலோசனை





வவுனியாவில் பருவமழை மற்றும் பருவகால மாற்றங்கள் குறித்தும் அது தொடர்பாகச் செய்யப்பட வேண்டிய முன்னேற்பாடுகள் குறித்தும் அவசர கலந்துரையாடல் ஒன்று மாவட்டச் செயலக மாநாட்டு மண்டபத்தில் நேற்று இடம்பெற்றது.

மாவட்ட அரசாங்க அதிபர் பி.ஏ.சரத்சந்திர தலைமையில் இடம்பெற்ற இந்தக் கலந்துரையாடலில் மாவட்டத்தின் தற்போதைய பருவ காலநிலை மாற்றம் காரணமாக பருவ மழை வவுனியாவில் பெய்து வருகின்றது, அதன் போது அனர்த்தம் ஏற்படும் சந்தர்ப்பம் உருவாகும் வேளையில் அதனை எதிர்கொள்வதற்காக எடுக்கப்பட வேண்டிய முன்னேற்பாடுகள் குறித்து விரிவாக ஆராயப்பட்டன.

இக் கலந்துரையாடலில் மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவின் உயர் அதிகாரி, நீர்பாசன திணைக்கள பொறியியலாளர், கமநல சேவைகள் திணைக்கள உயர் அதிகாரி, விவசாய திணைக்களப் பணிப்பாளர், இராணுவம், பொலிஸ் உள்ளிட்ட பிரிவுகளின் உயர் அதிகாரிகள் மற்றும் விடயத்திற்கு பொறுப்பான உத்தியோகத்தர்கள் எனப் பலரும் பங்குபற்றியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# இலங்கை சிவசேனை அமைப்பு இந்தியாசிடம் 4 கோரிக்கைகள்




மறவன்புலவு சச்சிதானந்தம் தலைமையிலான சிவசேனை அமைப்பு, இலங்கை தொடர்பான நான்கு கோரிக்கைகளை இந்திய அரசாங்கத்திடம் மகஜர் ஊடாக வலியுறுத்தியுள்ளது.

அண்மையில் யாழ்ப்பாணம் வருகை தந்த இந்திய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமனிடம் இந்த மகஜர் இந்தியத் துணைத் தூதரக அதிகாரிகள் ஊடாக கையளிக்கப்பட்டதாக யாழ் ஊடக அமையத்தில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பில் சிவசேனை அறிவித்தது.

அந்த நான்கு கோரிக்கைகளாவன –

1) 1987 இல் இந்தியா – இலங்கை இடையே மேற்கொள்ளப்பட்ட ஒப்பந்தம் முழுமையாக நடைமுறைப்படுத்தப்பட வேண்டும். தமிழர்களின் பாரம்பரிய தாயகத்தை இணைத்து, இந்து மக்களுக்கு தனி மாகாணத்தை உருவாக்க வேண்டும்.

2)தமிழகத்தில் உள்ள பாரதிய வித்தியா பவன் அமைப்பை அழைத்து, யாழ்ப்பாணம் கலாசார மையத்தில் கலைகள், இசைகள் என்பவற்றைக் கற்பிக்க வேண்டும்

3)காங்கேசன்துறை – நாகப்பட்டினம் துறைமுகங்களில் இலங்கை மற்றும் இந்திய ரூபாயை மாற்ற வங்கி வசதிகள் ஏற்படுத்தப்பட வேண்டும்.

4)மதமாற்றம் செய்பவர்களை இந்தியாவில் இருந்து இலங்கைக்குள்ளும் இலங்கையில் இருந்து இந்தியாவுக்குள்ளும் அனுமதிக்கக் கூடாது.

# வடமாகாண மரநடுகை மாதம்

## கார்த்திகை 01 - 30, 2023




கார்த்திகையில் மரநடுகை தேசத்தை மாத்திரமல்ல;
தமிழ்த் தேசியத்தின் ஆன்மாவையும் குளிரச்செய்யும்!

**தமிழ்த் தேசியப் பசுமை இயக்கம்**



# வடக்கு மக்களின் குடிதண்ணீர்ப் பிரச்சினை தீர்வு காண்பது தொடர்பில் கலந்துரையாடல்

யாழ். நதி நீர் திட்டத்தின் ஊடாக வட மாகாண மக்களின் குடிதண்ணீர்ப் பிரச்சினைக்கு விரைவில் தீர்வு காண்பது தொடர்பில் கலந்துரையாடப்படுகிறது என பிரதமர் தினேஷ் குணவர்தன தெரிவித்துள்ளார்.

யாழ். நதி நீர் திட்டத்தை நடைமுறைப்படுத்துவது தொடர்பில் பொறியியலாளர்கள் மற்றும் தொடர்புடைய நிறுவனங்களுடன் பேச்சு நடத்தப்படுகிறது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பாரம்பரியத்திற்கு ஏற்ப பிரச்சினையைக் கையாள்வது தொடர்பிலும் பிரதமர் ஆலோசித்து வருகிறார் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தற்போதுள்ள 40 ஆயிரம் ஏரிகளை மேம்படுத்தவும் மழை நீரை சேமிக்கவும் கடலில் கலக்கும் நதி நீரை சேகரிக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது எனவும் பிரதமர் தெரிவித்துள்ளார்.



# 2024 வரவு - செலவுத் திட்டத்திற்கு பொதுக் கணக்குகள் குழு அனுமதி




2024 வரவு – செலவுத் திட்டத்திற்கு கோபா எனப்படும் அரசாங்கப் பொதுக் கணக்குகள் பற்றிய குழுவின் அனுமதி வழங்கப்பட்டுள்ளது என அதன் தலைவர் நாடாளுமன்ற உறுப்பினர் கலாநிதி ஹர்ஷ டி சில்வா தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் ஆற்றிய உரையின் போதே அவர் இதனை கூறியுள்ளார்.

எதிர்வரும் திங்கட்கிழமை சமர்ப்பிக்கப்படவுள்ள வரவு – செலவுத் திட்டத்திற்கு அமைவாக தேவைப்படும் நிதியை எவ்வாறு பெற்றுக்கொள்வது என்பது தொடர்பில் ஜனாதிபதியும் பிரதமரும் அன்றைய தினம் தெளிவுபடுத்துவார்கள் என அவர் தெரிவித்துள்ளார்.

எவ்வாறாயினும், இருவரின் வரவு –செலவுத் திட்ட உரைகளின் அடிப்படையில், 3 லட்சத்து 900 கோடி ரூபா நிதியை பெற்றுக்கொள்ள தமது தெரிவுக்குழு அனுமதி வழங்கியுள்ளதாகவும் நாடாளுமன்ற உறுப்பினர் கலாநிதி ஹர்ஷ டி சில்வா கூறியுள்ளார்.

# இலங்கையின் நிதித்துறையை வலுப்படுத்துவற்கு உலக வங்கியிடமிருந்து 15 கோடி டொலர் நிதி!

இலங்கையின் நிதித்துறையை வலுப்படுத்துவதற்காக 15 கோடி டொலர் நிதியை வழங்க உலக வங்கியின் நிறைவேற்று பணிப்பாளர் சபை இணக்கம் தெரிவித்துள்ளது.

இலங்கைக்கு வலுவான நிதி பாதுகாப்பு வலையமைப்பின் அவசியத்தை தற்போதைய பொருளாதார நெருக்கடியானது எடுத்துக்காட்டுவதாக, மாலைத்தீவுகள், நேபாளம் மற்றும் இலங்கைக்கான உலக வங்கியின் பணிப்பாளர் Faris Haddad-Servos தெரிவித்துள்ளார்.

இதற்காக பொருளாதாரம், வர்த்தகம், தனிநபர்கள், சிறு வணிகங்கள் மற்றும் ஏழை குடும்பங்களுக்கு நிலையான மற்றும் நம்பகமான வங்கிக் கட்டமைப்பு மிகவும் அவசியமெனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

நிலையான காப்புறுதித் திட்டத்தை வலுப்படுத்துவதன் ஊடாக பின்தங்கிய கிராமப்புறங்களில் வசிப்போர் மற்றும் பெண்கள் உள்ளிட்ட சிறியளவான வைப்பாளர்களின் சேமிப்பை பாதுகாக்க முடியுமெனவும் அவர் கூறியுள்ளார்.




இந்த திட்டம் இலங்கையின் நிதிக்கட்டமைப்பில் நம்பிக்கையை நிலைநிறுத்தும் எனவும், நாட்டை மீண்டும் சிறப்பாகக் கட்டியெழுப்புவதில் முக்கிய பங்காற்றுமெனவும் இலங்கைக்கான உலக வங்கியின் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

# ஐந்து நிறுவனங்களின் வருடாந்த வருமானம் ரூ.925 மில்லியன் ஜனாதிபதியிடம் கையளிப்பு

ஆரம்ப கைத்தொழில் இராஜாங்க அமைச்சுக்கு சொந்தமான 5 நிறுவனங்களின் வருடாந்த வருமானம் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

திறைசேரிக்கு வழங்கும் நோக்கில் இந்த 92 கோடி ஐம்பது லட்சம் ரூபா நிதி ஜனாதிபதியிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

தேசிய இரத்தினங்கள் மற்றும் ஆபரண அதிகார சபையின் 350 மில்லியன் ரூபா, வரையறுக்கப்பட்ட இலங்கை பொஸ்பேட் நிறுவனத்தின் 300 மில்லியன் ரூபா, பி.சி.சி. நிறுவனத்தின் 100 மில்லியன் ரூபா, தேசிய உப்பு மற்றும் சிமெண்ட் நிறுவனத்தின் 175 மில்லியன் ரூபா வருமானங்களே ஜனாதிபதியிடம் கையளிக்கப்பட்டுள்ளன.

# RUHBINS HOSPITAL (PVT) LTD.

NO. 160, POINT PEDRO ROAD, NELLIYADY, JAFFNA.

## NOVEMBER 14

# WORLD DIABETES DAY

# DIABETES IS A SILENT KILLER

| | | |
|---|---|---|
| Approximately 463 M + From the World Population | Over 2 M Sri Lankans are Diabetes | Every 6 seconds One person dies due to Diabetes |



## Access to Diabetes Care

### WELLNESS PACKAGE

- HBA1C
- Fasing/ Random Blood Sugar
- Total Cholesterol
- Creatinine & eGFR
- Blood Pressure
- BMI Assessment
- Consultation with Medical Officer
- Advice on Lifestyle Modification

**Special Offer**

**Rs. 5,500/-**

Offer valid till Dec 14th

Hotline: +94772486642

உங்கள் அன்பிற்குரியவரை நீரிழிவு பரிசோதனை செய்துகொள்ள சொல்லுங்கள், அது அவர்களின் உயிரை பாதுகாக்கும்.

Ruhbins Hospital

No. 160, Pointpedro Road, Nelliyadi, Jaffna

## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
இது பற்றிய விவரங்களை முரசும் அவ்வப்போது வெளியிட்டு வந்தது.

இப்படி தெற்கில் தெரிவாவோர் அமைச்சர் தேவானந்தாவுக்குக் கீழ் உள்ள திணைக்களங்களின் வடக்கு அலுவலகங்களுக்கும் கூட நியமிக்கப்பட்டு அனுப்பப்பட்டிருக்கின்றனர் என்று சுட்டிக்காட்டி இருந்தோம்.

இத்தகைய நியமனங்களும் பணிய மர்த்தலும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவைக் கடும் சீற்றத்துக்கும் எரிச்சலுக்கும் உள்ளாக்கி இருந்தன என அறிந்திருந்தோம்.

இந்த விடயம் குறித்து அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா நேற்று முன்தினம் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவையும், பிரதமர் தினேஷ் குணவர்த்தனவையும் ஒன்றாகச் சந்தித்து தமது ஆட்சேபனையைத் தெரிவித்திருக்கின்றார்.

இப்படிப் பிற மாவட்டங்களைச் சேர்ந்தோர் வடக்கே நியமிக்கப்படும் பட்சத்தில், பாதிக்கப்படுவோர் இதனை ஓரவஞ்சனை நடவடிக்கையாக நோக்குவர். அத்துடன் அவை தேவையற்ற அரசியல் குழப்பங்களை கொண்டுவரும் என அமைச்சர் தேவானந்தா நேரடியாகவே பிரதமருக்கும் ஜனாதிபதிக்கும் எடுத்துரைத்திருக்கின்றார்.

'அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் கருத்துக்களை ஏற்றுக்கொண்ட ஜனாதிபதி, எதிர்காலத்தில் அரசாங்க நிறுவனங்களில் வெற்றிடம் ஏற்படும் பட்சத்தில் அந்தந்த மாவட்டங்களைச் சேர்ந்தவர்கள் மூலமே வெற்றிடங்களை நிரப்புவதற்கு முயற்சிக்க வேண்டும் எனத் தெரிவித்தார். அண்மையில் யாழ் பல்கலைக் கழகத்திற்கு தென்னிலங்கையை சேர்ந்த ஏழு சிற்றூழியர்களை நியமிப்பதற்கான முன்னெடுப்புகள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் வேண்டுகோளுக்கு அமைய இடைநிறுத்தப்பட்டிருந்தமையுடன், கடற்றொழில் திணைக்களத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டவர்களை திருப்பி அழைப்பதற்கான அறிவுறுத்தல்களும் வழங்கி வைக்கப்பட்டுள்ளமை சுட்டிக்காட்டத்தக்கது.' – என்று அமைச்சர் தரப்பின் செய்திக் குறிப்பு ஒன்று தெரிவித்தது.

அதை விடவும் இந்தச் சந்திப்பின் போது இரண்டு முக்கிய விடயங்களை ஜனாதிபதி மற்றும் பிரதமரின் இணக்கத்துடன் அமைச்சர் டக்ளதேவனந்தா முன்நகர்த்தி இருக்கின்றார்.

ஒன்று – நாளைய தீபாவளிப் பண்டிகையை ஒட்டி ஜனாதிபதி செயலகம், பிரதமர் செயலகம் போன்றவற்றில் நந்திக்கொடி பறக்க விடப்படும். அத்தோடு அவை தீபங்களினால் அலங்கரிக்கப் படும்.

அடுத்தது – தற்போதைய அரசாங்கத்தினால்அறிமுகப்படுத்தப்பட்ட 'அஸ்வெசும' என்ற திட்டத்திற்கு 'ஆறுதல் திட்டம்' என்ற மொழிபெயர்ப்பைத் தமிழில் பயன்படுத்த வேண்டும் என்ற அமைச்சர் டக்ளஸின் கோரிக்கை ஏற்றுக்கொள்ளப் பட்டிருக்கிறது.

இந்தச் சிங்களச் சொற்றொடருக்கு சரியான தமிழாக்கம் யாது என்று எனக்குத் தெரியவில்லை. எனினும் தெற்கில் சில ஊடகத் தரப்புகள் அதனை 'உயிர் மூச்சு' திட்டம் என்று பயன்படுத்தியமையை அவதானித்தேன். எது சரி என்று தெரியவில்லை. தமிழ் – சிங்களம் இரண்டிலும் பாண்டித்தியம் உள்ளவர்கள்தான் எது சிறப்பு என்று கூற வேண்டும்.

எது, எப்படி என்றாலும், நேற்றுத் தனது 66 ஆவது பிறந்த நாளைக் கொண்டாடிய டக்ளஸ் தேவானந்தாவுக்கு மேற்படி மூன்று விடயங்களிலும் கிடைத்த பெறுபேறுகள் பிறந்தநாள் பரிசுக்குரிய மகிழ்வாக இருந்திருக்கும் என்பது நிச்சயம்.

## கம்பளையில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
வைக்கப்பட்டிருந்த நிலையில் பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளது.

கம்பளை, தெல்பிடியதேவிடபகுதியைச் சேர்ந்த பத்மா தர்மசேன என்ற 63 வயதுடைய இரண்டு பிள்ளைகளின் தாயே இவ்வாறு கொலை செய்யப்பட்டுள்ளார்.

அந்தப் பெண் பணக் கொடுக்கல் – வாங்கல் தொடர்பில் நகருக்குச் சென்றுவிட்டு வீடு திரும்பியிருந்த நிலையில் கொலை செய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

அடையாளம் தெரியாத நபர் ஒருவர் வீட்டுக்குள் அத்துமீறிப் புகுந்து அவரைக் கொலை செய்து விட்டு அவரிடம் இருந்த பணத்தைப் பறித்துச் சென்றுள்ளார் என்றும் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

சம்பவம் இடம்பெற்ற வேளை வீட்டில் அந்தப் பெண்ணைத் தவிர வேறு எவரும் இருக்கவில்லை என்றும் பொலிஸார் மேலும் தெரிவித்துள்ளனர்.

கொலைச் சந்தேகநபரைப் பொலிஸார் தேடி வருகின்றனர்.

## பருத்தித்துறையில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
இவர் நேற்றுமுன்தினம் நலன்புரி உதவித் திட்டத்தைப் பெறுவதற்காகத் தனது வீட்டிலிருந்து சென்றதையடுத்தே மயங்கி விழுந்து உயிரிழந்துள்ளார்.

## கொக்குத்தொடுவாய்..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
கொக்குத்தொடுவாயில் அடையாளம் காணப்பட்ட மனிதப் புதைகுழி அகழ்வுப் பணிகள் இடம்பெற்ற நிலையில் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டிருந்தன. மீண்டும் எதிர்வரும் 20ஆம் திகதி அகழ்வும் பணிகள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

தொல்லியல் அதிகாரிகள், சட்ட வைத்திய அதிகாரிகள் உள்ளிட்ட அனைத்து அதிகாரிகளும் இதற்கான ஏற்பாடுகளை முன்னெடுக்கின்றனர்.


இம்முறை இடம்பெறும் அகழ்வில் துறைசார் நிபுணர்களை மேலதிகமாகப் பயன்படுத்தி அகழ்வைத் துரிதப்படுத்த நடவடிக்கைகள் எடுக்கப்படும். அதேநேரம் நிலத்தின் கீழ் எதுவரை மனித உடல்கள் புதைக்கப்பட்டுள்ளன என்பதனைக் கண்டறியும் ரேடாரைப் பயன்படுத்த நீதிமன்றிடம் அனுமதி கோரப்பட்டுள்ளது.

## கிரிக்கெட் நிர்வாகத்தை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
தீர்மானத்தை மேற்கொள்ள முடியும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

இது தொடர்பில் மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் மூன்று வழக்குகள் நிலுவையில் உள்ளன என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

எதிர்வரும் நாட்களில் இது தொடர்பான விடயங்களை விளையாட்டுத்துறை அமைச்சர் நீதிமன்றத்தில் முன்வைப்பார் என்றும் நீதி அமைச்சர் மேலும் கூறினார்.





# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

## இயற்கையும் விளையாடுகின்றது

'பாவி போன இடம் பள்ளமும் திட்டியும்' என்பார்கள்.

இலங்கையில் பாவிகள்தான் அதிகம் போலும். இலங்கை எதிர்கொள்ளும் விடயங்கள் அப்படி ஓர் எண்ணத்தைத்தான் தந்து நிற்கின்றன.

'உப்பு விற்கப் போனால் ஒரே மழை. மாவு விற்கப் போனால் ஒரே காற்று' என்ற கதையாக இலங்கையை பருவ கால மாற்றங்களும் போட்டு ஆட்டிப் படைக்கின்றன.

தென்னிலங்கை மக்களின் பெருவாரியான வாக்குகள் ஆதரவுடன் அதிகாரத்துக்கு வந்த ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, நாட்டுக்கும் மக்களின் உடல் நலனுக்கும் தாம் நல்லது செய்கின்றார் என்று கூறிக்கொண்டு இரசாயனப் பசளைகள், செயற்கைக் களை கொல்லிகள், அசேதன பீடை நாசினிகள் என எல்லாவற்றுக்கும் ஒரேயடியாகத் தடை விதித்தார். நாட்டின் விவசாயத் துறையே நடுவீதிக்கு வந்து நிற்கும் அவலம் அதனால் நேர்ந்தது.

அதை ஒட்டி வந்த கொவிட் தொற்றும், பொருளாதார நெருக்கடியும் ஆட்டிப் படைக்க, நாடு அதல பாதாளத்தில் விழுந்தது. கடனிறுக்க வகையற்ற நாடாக அதன் பொருளாதாரம் சரிந்தது.

அந்த நெருக்கடியில் இருந்து மீளுவதற்காக பகீரதப் பிரயத்தன முயற்சியில் நாடு ஈடுபடும் போது 'சாண் ஏற முழம் சறுக்கும் நிலையாக' இயற்கை காலை வாருகின்றது.

இப்போதுதான் கடும் வறட்சியில் இருந்து நாடு மீண்டெழுந்தது. வறட்சியால் சுமார் 64 ஆயிரம் ஏக்கர் நெற்செய்கை பாதிக்கப்பட்டதாகவிவசாயஅமைச்சின்புள்ளிவிவரங்கள்தெரிவிக்கின்றன. அதற்கான நஷ்ட ஈடு இன்னும் விவசாயிகளுக்குச் சரிவரக் கிடைக்கவில்லை.

அதற்கிடையில் இப்போது பெரும் போகம் ஆரம்பித்த கட்டத்திலேயே மழை கொட்டித் தீர்ப்பதால் பல மாவட்டங்களில் நெற்செய்கை அடியோடு அழிந்து போகும் ஆபத்து ஏற்பட்டு இருக்கின்றது.

இதுவரையில் கிடைத்த தகவல்களின்படி அறுவடைக்குத் தயாராகி வந்த சுமார் 12 ஆயிரம் ஏக்கர் நெற்செய்கை பெருவெள்ளத்தினால் முற்றாகப் பாதிக்கப்பட்டு அழிந்துவிட்டது.

மேலும் மழையும் வெள்ளமும் தொடருமானால், இந்த அழிவுநிலை மேலும் உயரலாம் என்று அஞ்சப்படுகிறது.

வறட்சி அழிவுக்கு நஷ்ட ஈடு செலுத்த முற்படும் அரசு, குறுகிய காலத்தில் வெள்ள அழிவிற்கும் நஷ்ட ஈடு செலுத்த வேண்டிய கட்டாயத்துக்குத் தள்ளப்படும்.

பொருளாதார நெருக்கடியில் இருந்து நாடு மீளுவதற்கு இயற்கையும் ஒத்துழைக்க மாட்டாது என்றால், நாடு என்ன செய்யப் போகின்றது? பொருளாதார நெருக்குவாரங்களிலிருந்து நாடு மீண்டெழுவதற்கான வாய்ப்புகள் தொடர்ந்து அடைபட்டுக் கொண்டே இருக்கின்றன.

# 18 வயதுக் காதலனுடன் வவுனியாவில் ஒன்றாக இருந்த 14 வயது சிறுமி மீட்பு

காணாமல் போன 14 வயதுடைய சிறுமி ஒருவர் வவுனியா, நாகர்இலுப்பைக்குளம் பகுதியிலுள்ள வீடு ஒன்றிலிருந்து நேற்று மீட்கப்பட்டெ. உடனிருந்த 18 வயது இளைஞன் ஒருவரும் வவுனியா பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

உடப்புஸ்ஸலாவை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஒல்டிமார் தும்பவத்தை தோட்டத்தில் வசிக்கும் சிறுமி ஒருவரை காணவில்லை என கடந்த 3 ஆம் திகதியன்று சிறுமியின் குடும்பத்தினர் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு மேற்கொண்டனர். சமூக வலைத்தளத்திலும் சிறுமியின் படத்தைப் பிரசுரித்திருந்தனர்.

இந்நிலையில் நேற்று மதியம் அச் சிறுமி வவுனியா, நாகர்இலுப்பைக்குளம் பகுதியில் இளைஞருடன் தங்கிருந்தமையை அவதானித்த அயலவர்கள் அப்பகுதி கிராம சேவையாளருக்கு வழங்கிய தகவலின் அடிப்படையில் கிராம சேவையாளருடன் பொதுமக்கள், பொலிஸார், சிவில் அமைப்புக்கள், பெண்கள் பிரிவு உத்தியோகத்தர்கள் இணைந்து அந்த வீட்டுக்குச் சென்று சிறுமியை மீட்டு வவுனியா பொலிஸ் நிலையத்திற்கு அழைத்து சென்று விசாரணைகளை மேற்கொண்டனர்.

சிறுமியிடம் பொலிஸார் மேற்கொண்ட விசாரணையில் தானும், அந்த இளைஞனும் தொலைபேசி ஊடாக காதலித்தனர் எனவும் அவருடன் வாழ ஆசைப்பட்டு தான் இங்கே வந்தார் எனவும் தெரிவித்தார்.

ஆரம்ப கட்ட விசாரணைகளின் பின்னர் சிறுமி மருத்துவ பரிசோதனைகளுக்காக வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார். 18 வயதுடைய இளைஞர் கைது செய்யப்பட்டு பொலிஸ் தடுப்பு காவலில் வைக்கப்பட்டுள்ளார்.

## வடமாகாண மரநடுகை மாதம் கார்த்திகை - 2023

"கூர்மையாகச் செவிமடுத்துக் கொண்டிருக்கும் விண்ணுடன் பேசுவதற்கான மண்ணின் இடையறாத முயற்சிகளே மரங்கள்."

- இரவீந்திரநாத் தாகூர் (வங்கக் கவிஞர்)



## சர்வதேச சமூகத்துடன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)


கருதப்படுகின்றது எனவும் அவர் குறிப்பிட்டார்.

உலகளாவிய மாற்றங்களுக்கு ஈடு கொடுக்கும் வகையில் சர்வதேச அரங்கில் இலங்கையின் பங்கு மிகவும் முக்கியமானது எனவும் அவர் கூறினார்.

கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நேற்று நடைபெற்ற பண்டாரநாயக்க சர்வதேச கற்கை நிலையத்தின் வருடாந்த சான்றிதழ் வழங்கும் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இலங்கையின் சர்வதேச உறவுகள் தொடர்பில் சிறப்பான பங்களிப்பு வழங்கியதைப் பாராட்டி மறைந்த ஜயந்த தனபால மற்றும் எச். எம். ஜி. எஸ். பளிஹக்கார ஆகியோருக்கு ஜனாதிபதி விசேட கௌரவிப்புகளை வழங்கினார். மறைந்த ஜயந்த தனபாலவுக்கான விருதை அவரின் சார்பில் மகன் சிவங்க தனபால பெற்றுக்கொண்டார்.

கடன் நெருக்கடி, நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை அடைவதில் தாமதம் மற்றும் காலநிலை மாற்றம் தொடர்பான பிரச்சினைகள் உள்ளிட்ட கொவிட் தொற்றுநோய்க்கு பிந்தைய காலத்தில் எதிர்கொண்ட சவால்கள் குறித்து ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இதன்போது கருத்துத் தெரிவித்தார்.




ஆபிரிக்க பிராந்தியத்தில் குறைந்த வருமானம் பெறும் நாடுகளுக்கான கடன் நிவாரணத்திற்காக இலங்கை முன்நிற்கும் என்று தெரிவித்த ஜனாதிபதி, காலநிலை மாற்றத்தை குறைப்பதற்காக வெப்பமண்டல பிராந்தியத்திலும் கவனம் செலுத்தப்பட வேண்டும் என்றும் குறிப்பிட்டார்.



அமெரிக்காவுக்கும் சீனாவுக்கும் இடையிலான போட்டி மற்றும் உலகளாவிய புவிசார் அரசியலில் அதன் தாக்கத்திலிருந்து எழும் சிக்கலான தன்மையையும் ஜனாதிபதி குறிப்பிட்டார்.

தற்போதைய நிலைமையை “உலகளாவிய பலதரப்பு நெருக்கடியின் புவிசார் அரசியல்” என்று அழைத்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, கொவிட் 19 தொற்றுநோய், கடன் நெருக்கடி, காலநிலை மாற்றம், வர்த்தகப் பிரச்சினைகள் மற்றும் பிராந்திய மோதல்கள் அனைத்தும் ஒன்றோடொன்று இணைக்கப்பட்ட சவால்கள் என்றும் சுட்டிக்காட்டினார்.

இலங்கையின் வெளிவிவகாரக் கொள்கையின் அணுகுமுறை இந்து – பசுபிக் பிராந்தியம் தொடர்பான ஆசியான் அமைப்பின் நோக்குடன் சமநிலைப்படுவதாகத் தெரிவித்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, இந்த சமுத்திரங்கள் ஒவ்வொன்றும் இரண்டு பெரும் சமுத்திரங்களாகத் தனித்தனி அடையாளங்களைக் கொண்டிருப்பதாகவும் வலியுறுத்தினார்.

ஆசிய – பசுபிக் கருத்தாக்கத்தை சீனா விரும்புவதாகவும், ஒரு பெல்ட் ஒரு சாலைக் எண்ணக்கருவின் மூலம், பசுபிக் சமுத்திரத்தையும் இந்து சமுத்திரத்தையும் இணைத்துள்ளதாகவும் ஜனாதிபதி குறிப்பிட்டார்.

இந்த அனைத்து சூழ்நிலைகளிலும் கூட, பெரும் அதிகாரப் போட்டி இல்லாத இடமாக இந்து சமுத்திரத்தைப் பேண வேண்டியதன் முக்கியத்துவத்தை ஜனாதிபதி வலியுறுத்தினார்.

இந்த விடயங்கள் தொடர்பில் உலகளாவிய ரீதியில் ஏற்படுத்திக்கொள்ளும் ஒத்துழைப்பின் அவசியத்தையும் ஜனாதிபதி இங்கு சுட்டிக்காட்டினார்.

உலகளாவிய வர்த்தக முறையைப் பேணுவதன் முக்கியத்துவத்தை வலியுறுத்திய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, குறிப்பிடத்தக்க மாற்றங்கள் செய்யப்படுவதற்கு முன்னர் நாடுகளுக்கு இடையில் ஒருமித்த கருத்துத் தேவை என்றும் வலியுறுத்தினார்.

காஸாவில் நடைபெற்று வரும் போர் குறித்து கவலை தெரிவித்த ஜனாதிபதி, ஹமாஸ் அமைப்பின் தலைமைத்துவத்தை அழிப்பதன் மூலம் மாத்திரம் மோதலை முடிவுக்குக் கொண்டு வர முடியாது என்றும், மேலும் அது தீவிரமடைவதைத் தடுக்க உடனடி போர் நிறுத்தம் அவசியம் என்றும் குறிப்பிட்டார்.

சான்பிரான்சிஸ்கோவில் நடைபெறவுள்ள எபெக் உச்சிமாநாட்டின் போது அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் மற்றும் சீன ஜனாதிபதி சீ ஜிங் பிங் ஆகியோருக்கு இடையில் நடைபெறவிருக்கும் சந்திப்பின் ஊடாக தற்போதைய நிலைமையைத் தணிக்க சாதகமான முடிவு கிடைக்கும் என நம்புவதாகவும் ஜனாதிபதி குறிப்பிட்டார்.

இந்த உலகளாவிய சிக்கல்களைக் கடந்து செல்வதற்கு கூட்டு முயற்சி அவசியம் என்றும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மேலும் வலியுறுத்தினார்.

சர்வதேச கற்கைகளுக்கான பண்டாரநாயக்க நிலையத்தின் தலைவர், முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க, வெளிநாட்டலுவல்கள் இராஜாங்க அமைச்சர் தாரக பாலசூரிய, நாடாளுமன்ற உறுப்பினர்களான அனுர பிரியதர்ஷன யாப்பா, கலாநிதி ஹர்ஷ டி சில்வா, எரான் விக்ரமரத்ன, வெளிநாட்டலுவல்கள் அமைச்சின் செயலாளர் அருணி விஜேவர்தன, இலங்கைக்கான ஆஸ்திரேலிய உயர்ஸ்தானிகர் போல் ஸ்டீவன்சன், இலங்கைக்கான பிரான்ஸ் தூதுவர் ஜோன் பிராங்சுவா பெக்டெட், இலங்கைக்கான நியூசிலாந்து உயர்ஸ்தானிகர் மைக்கல் அப்பிள்டன், வெளிநாட்டு இராஜதந்திரிகள், முன்னாள் தூதுவர்கள், சர்வதேச கற்கைகளுக்கான பண்டாரநாயக்க நிலையத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர், பேராசிரியர் காமினி கீரவெல்ல, பண்டாரநாயக்க சர்வதேச கற்கைகளுக்கான முகாமைத்துவ சபை மற்றும் கல்விசார் ஊழியர்கள் உட்பட பலர் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர்.






## ஐ.சி.சி. உறுப்புரிமையிலிருந்து இலங்கை

# இடைநிறுத்தம்!

### கிரிக்கெட்டுள் அரசியல் இல்லையென நிரூபித்தால் மீண்டும் வாய்ப்பு

இலங்கைக் கிரிக்கெட்டுக்குள் அரசியல் புகுந்துள்ளது எனத் தெரிவித்துள்ள சர்வதேசக் கிரிக்கெட் சபை (ஐ.சி.சி), உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் இலங்கைக் கிரிக்கெட்டை ஐ.சி.சியின் உறுப்புரிமையிலிருந்து இடைநிறுத்தியுள்ளது.

இலங்கைக் கிரிக்கெட் சபை அண்மைய சில வருடங்களாக பெரும் அரசியல் தலையீடுகளுக்கு மத்தியில் செயற்பட்டு வருகின்றது எனப் பல தரப்பினராலும் குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டு வந்தன.

இதனால்தான் இலங்கைக் கிரிக்கெட் அணி படு பாதாளத்துள் விழுந்துள்ளது எனவும் தெரிவிக்கப்பட்டது.

இலங்கைக் கிரிக்கெட்டுக்குள் அரசியல் தலையீடுகள் உள்ளன என்பதை, முன்னாள் நட்சத்திர வீரர்களான குமார் சங்கக்கார, மஹேல ஜெயவர்த்தன மற்றும் லசித் மலிங்க ஆகியோர் தாம் விளையாடிய காலப்பகுதியில் வெளிப்படையாகவும் மறைமுகமாகவும் தெரிவித்திருந்தனர்.

இதனால் அவர்களுக்கு கடுமையான நெருக்கடிகளும் நேர்ந்தன.

இந்நிலையில், தற்போது உலகக் கிண்ணக் கிரிக்கெட் தொடரில் இலங்கை அணி படு தோல்வியடைந்து கொண்டிருந்தபோது, இலங்கைக் கிரிக்கெட்டுக்குள் அரசியல் புகுந்துள்ளது என்பதை இலங்கை அரசியல்வாதிகள் பலரும் சாடி வந்த அதேவேளை, இலங்கைக் கிரிக்கெட் விவகாரம் நீதிமன்றம் மற்றும் நாடாளுமன்றம் வரை சென்றிருந்தது.

இவற்றை அவதானித்து வந்த ஐ.சி.சி., தற்போது தனது அதிரடி நடவடிக்கையை எடுத்துள்ளது.

இலங்கைக் கிரிக்கெட்டின் அண்மைக் காலச் செயற்பாடுகள் குறித்து ஐ.சி.சி. நேற்றுக் கூடிக் கலந்தாலோசித்தது.

அதன்படி, ஐ.சி.சியின் உறுப்பினர் என்ற வகையில் இலங்கைக் கிரிக்கெட், தமது கடமைகளைக் கடுமையாக மீறுகிறது என ஐ.சி.சி. தீர்மானித்தது. இதையடுத்து, இலங்கைக் கிரிக்கெட்டை ஐ.சி.சியின் உறுப்புரிமையில் இருந்து இடைநிறுத்தியும் உள்ளது.

அதேவேளை, இலங்கைக் கிரிக்கெட் இடைநிறுத்தப்பட்ட தீர்மானத்தை மாற்றுவதற்கு, இலங்கைக் கிரிக்கெட் நிர்வாகத்தின் செயற்பாடுகள் தொடர்பில் விளக்கமளிப்பதுடன், நிர்வாக நடவடிக்கைகளுக்குள் அரசியல் தலையீடுகள் இல்லை என்பதனை நிரூபிக்க வேண்டும் எனவும் ஐ.சி.சி. வலியுறுத்தியுள்ளது.



# பிரதமர் மோடி ஒரே ஆடையை மீண்டும் அணிந்து பார்த்ததுண்டா?

## - ராகுல் காந்தி கேள்வி



தேர்தல் பிரச்சாரத்தின்போது பிரதமர் மோடி அணியும் ஆடை குறித்து காங் கிரஸ் முக்கியத் தலைவர் ராகுல் காந்தி விமர்சித்துள்ளார்.

'பிரதமர் மோடி ஒரு நாளில் ஒன்றுக்கும் மேற்பட்ட லட்சம் ரூபா மதிப்புள்ள ஆடை கள் அணிகிறார். நான் ஒற்றை வெள்ளை ரி சேர்ட்டையே அணிகிறேன்" என்றும் அவர் கேலி செய்தார்.

இன்னும் ஒரு வாரத்தில் தேர்தலைச் சந்திக்க உள்ள மத்தியப் பிரதேச மாநிலத்தின் சாட்னா மாவடத்தில் நடந்த காங்கிரஸ் கட்சியின் தேர்தல் பிரச்சார பேரணியில் அக்கட்சியின் முக்கியத் தலைவரும், வயநாடு எம்.பி.யுமான ராகுல் காந்தி கலந்து கொண்டார்.

இதன்போது ராகுல் காந்தி மேலும் உரையாற்றுகையில், பிரதமர் மோடி ஒரே நாளில் 1 லட்சம் ரூபா மதிப்புள்ள ஒன்று அல்லது இரண்டு உடைகளை மாற்றுகிறார். அவர் ஒரே உடையைத் திரும்ப அணிந்து நீங்கள் யாராவது பார்த்திருக்கிறீர்களா? நான் இந்த ஒற்றை வெள்ளை நிற டி-ஷர்ட் மட்டுமே அணி கிறேன்.

அத்துடன், நான் பிரதமர் மோடியின் பேச்சைக் கேட்டிருக்கிறேன். அவர் தனது ஒவ்வொரு பேச்சிலும் நான் இதர பிற்படுத்தப்பட்ட பிரிவினைச் சேர்ந்தவர் என்று அடிக்கடிச் சொல்வார்.

இதனைத் திரும்பத் திரும்பச் சொல்லியே பிரதமரானார். இப்போது அவரது பேச்சில் ஏன் சாதியைக் குறிப்பிட்டுப் பேசுவது இல்லையென்று உங்களுக்குத் தெரியுமா? நான் சாதி வாரி கணக்கெடுப்பை பற்றி பேச ஆரம்பித்திருக்கிறேன். நான் அதுபற்றி பேசத் தொடங்கியதிலிருந்து, பிரதமர் மோடி இந்தியாவில் சாதி இல்லை என்று பேசத் தொடங்கியிருக்கிறார்.

மாநிலத்தில் காங்கிரஸ் ஆட்சிக்கு வந்ததும், முதல் நடவடிக்கையாக சாதி வாரி கணக்கெடுப்பு நடத்தி மத்தியப் பிரதேசத்தில் இதர பிற்படுத்தப்பட்ட மக்கள் இருக்கிறார்கள் என்று கண்டறியப்படும் என்று தெரிவித்துள்ளார்.

# டில்லியின் அண்டை மாநிலங்களில் பயிர்க் கழிவுகளை எரிப்பதற்கு தடை



பஞ்சாப் உள்ளிட்ட டில்லியின் அண்டை மாநிலங்களில் பயிர்க் கழிவு களை எரிப்பதை நிறுத்த வேண்டும் என்று உச்ச நீதிமன்றம் தெரிவித்துள்ளது.

மேலும், டில்லியில் நிலவும் காற்று மாசுபாட்டைக் கட்டுப்படுத்த தீர்வுகள் எட்டப்பட வேண்டும் என்றும் அறிவு றுத்தியுள்ளது.

டில்லியில் காற்று மாசுபாட்டை கட்டுப் படுத்துவது தொடர்பான வழக்கு நீதிபதி சஞ்சய் கிஷன் கவுல் தலைமையிலான நீதிபதிகள் சுதான்ஷூ துலியா, அசாதுதீன் அமனுல்லா ஆகியோர் அடங்கிய அமர்வு முன் விசாரணைக்கு வந்தது.

அப்போது நீதிபதி சஞ்சய் கிஷன் தெரிவிக்கையில், காற்று மாசுபாடு பிரச் சினை தொடர்பாக நிறைய அறிக்கைகள் வெளி வருகின்றன. நிறைய நிபுணர் குழுக்கள் அமைக்கப்பட்டுவிட்டன. ஆனால், களத்தில் ஏதும் நடந்த மாதிரி இல்லை. நாங்கள் நடவடிக்கைகளைக் கண்கூடாக காண விரும்புகிறோம் என்று தெரிவித்துள்ளார்.

அப்போது அரசுத் தரப்பில் பயிர்க் கழிவுகளை எரிப்பதைத் தடுக்க அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டு வருகின்றன என்று தெரிவிக்கப்பட்டது. இருப்பினும் நீதிபதிகள் மாநில அரசை கடுமையாக விமர்சித்தனர்.

தொடர்ந்து பேசிய நீதிபதிகள், எங்களுக்கு பயிர்க் கழிவுகள் எரிப்பது நிறுத்தப்பட வேண்டும். காற்றின் தரக் குறியீடு மேம்பட வேண்டும். அது எப்படி நடத்தப்படுகிறது என்பது உங்களுடைய பிரச்சினை.

ஆனால் தீபாவளி விடுமுறையில் காற்று மாசுபாடு குறைந்தே ஆக வேண்டும். பயிர்க் கழிவு எரிப்பைத் தடுக்க அவசர கால நடவடிக்கைகளை மேற்கொள்ளுங்கள்.

நேற்றிரவு மழை பெய்ததால் காற் றின் தரம் சற்றே மேம்பட்டுள்ளது என்று தெரிவித்துள்ளனர்.

# காசாவின் மிகப்பெரிய மருத்துவமனை மீதான இஸ்ரேலின் தாக்குதலில் 13 பேர் உயிரிழப்பு



காசாவின் மிகப் பெரிய மருத்துவமனையான அல்-ஷிபா மருத்துவமனை வளாகத்தில் இஸ்ரேல் நடத்திய தாக்குதலில் 13 பேர் உயிரிழந்துள்ளனர் எனவும் பலர் படுகாயம் அடைந்திருக்கின்றனர் என்றும் ஹமாஸ் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இஸ்ரேல் – ஹமாஸ் போர் நாளுக்கு நாள் உக்கிரமடைந்து வருகிறது. இந்த நிலையில், காசாவின் அல்–ஷிபா மருத்துமனை வளாகத்தில் இஸ்ரேல் நடத்திய தாக்குதலில் 13 பேர் பலியாகியுள்ளனர்.

இஸ்ரேலின் டாங்கர் வாகனங்கள் தாக்குதலில் ஈடுபட்டுள்ளதாக கூறப்படுகிறது. ஆனால், இஸ்ரேல் இராணுவம் இதுகுறித்து கருத்து தெரிவிக்கவில்லை.

இதேவேளை, காசாவில் உள்ள சுகாதாரத் துறையின் நிலை குறித்து சுகாதார அமைச்சகம் சில புள்ளிவிவரங்களை வெளியிட்டுள்ளது.

அதில், 35 மருத்துவமனைகளில் கிட்டதட்ட 18 மருத்துவமனைகள் சேவையில் இல்லை. 72 ஆரம்ப சுகாதார நிலையங்களில் 51 ஆரம்ப சுகாதார நிலையங்கள் மூடப்பட்டுள்ளன.

காசாவில் உள்ள சுகாதாரத் துறை மீது 270 இற்கும் மேற்பட்ட தாக்குதல்கள் நடந்துள்ளன. 57 நோயாளர் வண்டிகள் சேதமடைந்துள்ளன. அவற்றில் 45 முற்றிலும் சேதமடைந்துள்ளன.

மேலும் அல்–ரான்டிசி மருத்துவமனை, அல்–நாஸர் மருத்துவமனை, அரசு கண் மருத்துவமனை மற்றும் மனநல மருத்துவமனை ஆகிய நான்கு மருத்துவமனைகளையும் இஸ்ரேலிய படைகள் சுற்றிவளைத்துள்ளனர்.

இப்பகுதியில் பல பாடசாலைகள் மற்றும் குடியிருப்பு கட்டடங்கள் உள்ளன. ஆயிரக்கணக்கான நோயாளிகள், மருத்துவ ஊழியர்கள் மற்றும் இடம் பெயர்ந்த மக்கள் தண்ணீர், உணவு இல்லாமல் மருத்துவமனைகளுக்குள் சிக்கியிருயிருக்கின்றனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

காசா நகரின் வடகிழக்குப் பகுதியில் உள்ள தனது சுற்றுப்புறத்தில் குண்டுகள் வெடிப்பதால், 32 வயதான அபு முகமது என்பவர் தனது 15 உறவினர்களுடன் அருகில் உள்ள மருத்துவமனையில் தஞ்சமடைந்தார். இது குறித்து அவர், பாதுகாப்பான இடம் எதுவும் இல்லை. எனக்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை எனத் தெரிவித்துள்ளார்.

இஸ்ரேல் – ஹமாஸ் போர் தொடங்கி ஒருமாத காலம் ஆன நிலையில் காசா உருக்குலைந்துள்ளது. அங்கு இதுவரை 10 ஆயிரத்து 800 இற்கும் மேற்பட்ட பாலஸ்தீனர்கள் உயிரிழந்துள்ளனர் என ஹமாஸ் சுகாதாரத் துறை தெரிவித்துள்ளது.

இஸ்ரேல் தரப்பில் இதுவர 1400 பேர் உயிரிழந்துள்ளனர். சுமார் 239 பேர் பணயக் கைதிகளாகப் பிடித்துச் செல்லப்பட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# காசாவில் தினமும் 4 மணி நேரம் போரை நிறுத்த இஸ்ரேல் ஒப்புதல்!

காசாவில் தினமும் 4 மணி நேரம் போரை நிறுத்த இஸ்ரேல் ஒப்புதல் அளித்துள்ளதாக அமெரிக்கா அறிவித்துள்ளது.

இந்த நிலையில், இது குறித்து இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு தனது விளக்கத்தை அளித்துள்ளார்.

முன்னதாக நேற்று முன்தினம் அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் நிர்வாகம் தரப்பில், மனிதாபிமான அடிப்படையில் வடக்கு காசாவில் அன்றாடம் 4 மணி நேரம் போர் நிறுத்தம் மேற்கொள்ள இஸ்ரேல் ஒப்புதல் அளித்துள்ளது என்று தெரிவிக்கப்பட்டது.

இது குறித்து செய்தியாளர்களிடம் பேசிய ஜோ பைடனுன், குறைந்தது மூன்று நாட்களுக்கு மேலாவது போர் நிறுத்தம் மேற்கொள்ளும்படி இஸ்ரேலிடம் வேண்டியுள்ளோம் என்று கூறினார். அதேவேளையில், இஸ்ரேல் நிச்சயமாக முழுமையான போர் நிறுத்தத்தை இபோதைக்கு மேற்கொள்ள வாய்ப்பில்லை என்றும் கூறினார்.



இது தொடர்பில் இஸ்ரேல் பிரதமர் நெதன்யாகு கூறுகையில், போர் நிறுத்தம் என்பது ஆங்காங்கே மேற்கொள்ளப்படும். ஆனால் இது மீண்டும் மீண்டும் நடக்குமா எனத் தெரியவில்லை. ஹமாஸ் அமைப்பினருக்கு எதிராக நாங்கள் போர் மேற்கொண்டுள்ளோம். ஆகையால் வடக்கு காசாவில் உள்ள பொது மக்கள் பத்திரமாக வெளியேறும் வகையில் சில மணி நேரங்கள் தாக்குதல்கள் நிறுத்தப்படும். அதுவும் குறிப்பிட்ட சில இடங்களில் மட்டுமே. பொது மக்களின் நலன் கருதி இது மேற்கொள்ளப்படுகிறது என்று தெரிவித்துள்ளார்.

இதேவேளை, ஹமாஸுக்கு எதிரான போரில் தினமும் 4 மணி நேரம் இடைவெளி விடுவதாக இஸ்ரேல் தெரிவித்துள்ள நிலையில், அமெரிக்கா அதனை வரவேற்றுள்ளது.

இது தொடர்பாக அமெரிக்க வெள்ளை மாளிகை தேசிய பாதுகாப்பு கவுன்சிலின் ஒருங்கிணைப்பாளர் ஜான் கிர்பி கூறும்போது, இஸ்ரேல் தனது முடிவை அறிவித்துள்ளது. அப்பாவி பாலஸ்தீன மக்கள் கொல்லப்படுவதைத் தடுக்கும் நோக்கில் இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

அதேநேரத்தில், சர்வதேச சட்டங்களுக்கு முழுமையாக கட்டுப்படுவதாகவும் இஸ்ரேல் தெரிவித்துள்ளது. தொடர் போருக்கு மத்தியில் ஓர் இடைவெளி விடுவது என்ற இஸ்ரேலின் முடிவு சரியான திசையில் வைக்கப்பட்டுள்ள முதல் அடி. இதன் மூலம், அப்பாவி மக்கள் பாதுகாப்பான இடங்களுக்கு இடம்பெயர்வதற்கு இது ஒரு நல்ல வாய்ப்பாக அமையும் என தெரிவித்துள்ளார்.

# இரவு வேளையில் பெய்யும் மழையால் ஹட்டன் - டிக்கோயாவில் வெள்ளம்!

நாட்டில் நேற்று பிற்பகல் பெய்த கடும் மழையினால் ஏற்பட்ட வெள்ளப் பெருக்கில் டிக்கோயா பகுதியில் 10 இற்கும் அதிகமான வீடுகள் பாதிக்கப் பட்டுள்ளன.

ஹட்டன் – டிக்கோயா ஆறு பெருக் கெடுத்ததன் காரணமாகவே இந்த அனர்த்தம் ஏற்பட்டுள்ளது.

மலையகப் பகுதியில் கடந்த சில நாள்களாகப் பெய்துவரும் அடை மழையால் நீர்த்தேக்கங்களின் நீர் மட்டம் அதிகரித்து வருகிறது. ஆறுக ளும் பெருக்கெடுக்கத் தொடங்கியுள் ளன.

இந்த நிலையில், அந்தப் குதியில் தொடர்ச்சியாக மழைக்காலங்களில் ஆற்று நீர் பெருக்கெடுப்பதால் பல இடர்களை தொடர்ச்சியாகத் தாங்கள் சந்தித்து வருகிறார்கள் என பாதிக்கப் பட்ட மக்கள் தெரிவிக்கின்றனர்.

இதேவேளை, நாட்டின் பெரும்பா லான பகுதிகளில் இரவு வேளை யில் மழை பெய்யும் சாத்தியம் நிலவு வதாக வளிமண்டலவியல் திணைக் களம் எதிர்வுகூறியுள்ளது.

மேல், மத்திய, சபரகமுவ மற்றும் ஊவா மாகாணங்களின் சில இடங்க ளில் 50 மில்லி மீற்றருக்கும் அதிக மழைவீழ்ச்சி பதிவாகக்கூடும்.

அத்துடன், மழை பெய்யும் சந்தர்ப் பங்களில் பலத்த காற்றும் வீசக்கூடு மென வளிமண்டலவியல் திணைக் களம் எதிர்வுகூறியுள்ளது.



ශ්‍රී ලංකා විදේශ සේවා නියුක්ති කාර්යාංශය
இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம்
SRI LANKA BUREAU OF FOREIGN EMPLOYMENT

## ஜோர்தானில் பலவந்தமாக தொழில் புரிய நிர்பந்திக்கப்பட்டுள்ள இலங்கையர்கள்



விசா காலம் நிறைவ டைந்த நூற்றுக்கும் மே-ற்பட்ட இலங்கை இளை ஞர், யுவதிகள் ஜோர்தா னின் ஆடைத்தொழிற் சாலையொன்றில் பல வந்தமாக தொழில் புரிய நிர்பந்திக்கப்பட்டுள்ள னர்.

இது தொடர்பில் தகவல் கிடைத்துள்ளதாக வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் தெரிவித்துள்ளது.

இவர்கள் தொடர்பில் தற்போது அந்த நாட்டு தூதரகம் ஊடாக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாக வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் பிரதி பொது முகாமையாளர் காமினி செனரத் யாப்பா தெரிவித்துள்ளார்.

இந்த பிரச்சினையை விரைவில் நிவர்த்தி செய்து, பாதிக்கப்பட்ட தரப்பினருக்கான வசதிகளை வழங்கத் தேவையான ஏற்பாடுகள் முன்னெடுக்கப்படுகின்றன என அவர் கூறியுள்ளார்.



## உணவுப் பணவீக்கம் அடுத்த ஆண்டில் குறைவடையும் என்கின்றார் அமைச்சர்

உணவு பணவீக்கம் அடுத்த ஆண்டில் குறைவடையும் என வர்த்தக, வாணிப மற்றும் உணவு பாதுகாப்பு அமைச்சர் நளின் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

மேலும், 2024 ஆம் ஆண்டில் உணவுப் பொருள்களின் விலையை எந்தளவிற்கு கட்டுப்படுத்த முடியும் என்பதைப் புரிந்துகொள்வதற்காக உணவு உற்பத்தி தொடர்பான அறிக் கைகள் கோரப்பட்டுள்ளன எனவும் அமைச்சர் கூறியுள்ளார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நடைபெற்ற ஊடக சந்திப்பில் கருத்து தெரிவித்த போதே அமைச்சர் நளின் பெர்னாண்டோ இதனை தெரிவித்துள்ளார்.



# வடக்கு கிழக்குப் பகுதியில் சீனாவினுடைய எந்த முதலீட்டையும் அனுமதிக்க முடியாது!

## அதை எதிர்பதற்கு தாங்கள் தயார் என்கிறார் செல்வம்

**- மன்னார் நிருபர் -**

சீனாவைப் பொறுத்த வரையில் இலங்கையிலே ஒரு பொது நல நோக்கோடு அவர்களின் செயற்பாடுகள் இடம் பெறுவது இல்லை. மாறாக தங்களுடைய இலாபத்தைக் கருத்தில் கொண்டே சீனா செயற்படுகின்றது. எனவே வடக்கிலோ, கிழக்கிலோ சீனாவினுடைய எந்த முதலீட்டையும் அனுமதிக்கக் கூடாது. அதை நாங்கள் எதிர்போம்.

– இவ்வாறு வன்னி நாடாளுமன்ற உறுப்பினரும் ரெலோ கட்சியின் தலைவருமான செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்துள்ளார்.

ஊடகம் ஒன்றிற்கு நேற்று கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

இலங்கையிலே அபிவிருத்தி என்ற போர்வையிலே சீனாவினால் வீதிகள் போடப்பட்டன. ஆனால் கூடிய வட்டி வீதத்திலேயே தன்னுடைய லாபம் கருதியே இலங்கை அரசாங்கத்திற்கு சீன அரசாங்கம் இந்த வேலைகளைச் செய்து கொடுத்தது.

அதேபோல் தான் போர்ட் சிட்டியும் (கொழும்பு துறைமுக நகரும்). சீனா தனக்கான ஒரு பிராந்திய இடமாக போர்ட் சிட்டியை வைத்துக் கொண்டது.

அதே நேரம் துறைமுகத்தின் ஒரு பகுதி சீனாவிடம் கொடுக்கப்பட்டுள்ளது.

அம்பாந்தோட்டை விமான நிலையம், அம்பாந்தோட்டை துறைமுகம் இப்படியாக ஒட்டுமொத்த இலங்கையின் வருமானத்தின் முக்காவாசி பங்கை வட்டி வீதமாகக் கட்டுவதற்கான நிலைமையை சீனா உருவாக்கியுள்ளது.

அதனால் தான் இப்போது பொருளாதார ரீதியாக நாங்கள் மீள முடியாது நிலையில் இருக்கிறோம்.

இப்பொழுது சீனா மீண்டும் வடக்குக் கிழக்கை – குறிப்பாக வடக்கை – தன்னகத்தே கொண்டு வருவதற்கான நோக்கத்தின் அடிப்படையில் செயற்படுகின்றது.

இங்கே தன்னுடைய லாபம் கருதி என்னென்ன விடயங்களைக் கையாள முடியுமோ அவற்றைக் கையாளுகின்ற வகையிலே இன்று பல விடயங்களை செயற்படுத்தி வருகின்றது.

சீனாவினுடைய தூதுவர் வடக்கிலே பல இடங்களுக்கும் விஜயம் செய்து உணவுப்பொதிகளை வழங்கிக் கொண்டிருக்கின்றார். அதே நேரம் மீனவர்களுக்கும் மீன் வலைகளை வழங்குகின்றார்.

மீனவர்களை தன்னகத்தே கொண்டு வந்தால் – வடக்கில் உள்ள கரையோர பகுதிகளில் தன்னுடைய இலாபம் கருதி அட்டைப்பண்ணை உட்பட ஏனைய விடயங்களை மேற்கொண்டு – வடக்கில் உள்ள முழுமையான நிலங்களையும் அபகரிக்கலாம் என்று சீனா நினைக்கின்றது.

எங்களுடைய பிரதேசத்தை மையமாகக் கொண்டு இந்தியாவுக்கும் சீனாவுக்கும் முரண்பாடுகள் தோன்றுகின்ற போது எங்களுடைய பிரதேசம் பாதிக்கப்படுகின்ற நிலை ஏற்படும்.

இந்தியாவுக்கும் எங்களுக்கும் இந்த மீனவர்கள் சம்பந்தமாகப் பிரச்சினைகள் இருந்தாலும் இந்தியாவை விட்டு நாங்கள் வேறு எந்த நாட்டின் பக்கம் நிற்கின்ற வாய்ப்புகள் மிக குறைவாக இருக்கின்றன.

ஏனென்றால் எங்களுக்குப் பிரச்சினை என்றால் இந்தியாதான் முன்னுக்கு வருகின்ற ஒரு சூழல் இருக்கின்றது.

அந்த வகையிலே நாங்கள் இந்தியாவைப் பகைத்துக் கொண்டு அல்லது இந்தியாவுக்கும் சீனாவுக்கும் உள் முரண்பாடுகள் காரணமாக வடக்குக் கிழக்கிலே பாதிப்பு ஏற்படுகின்ற சூழலை அனுமதிக்க முடியாது.

ஆகவே இந்த விடயத்திலே சீனா தூதுவரின் வருகை வடக்கிலே எங்களுடைய மீனவப் பகுதிகளில் இருக்கின்ற செயற்பாடுகளை கண்காணிக்க வேண்டும் என்பதற்காகவே. எனவே அதற்கு அனுமதி வழங்க முடியாது என்பது என்னுடைய கருத்து. – என அவர் தெரிவித்தார்.

# 12 ஆயிரம் ஏக்கர் நெற்செய்கை இப்போது மழையினால் அழிவு

அறுவடைக்குத் தயாராகவிருந்த 12 ஆயிரம் ஏக்கர் நெற்செய்கை மழையினால் அழிவடைந்துள்ளது என விவசாய அமைச்சு தெரிவித்துள்ளது.

சுமார் ஒன்றரை மாதங்களாக பெய்து வரும் மழையினால், சில பகுதிகளில் வயல் நிலங்களுக்கு பாரியளவு சேதமேற்பட்டுள்ளதாகவும் வெள்ள நிலைமையால் நெற்செய்கைகள் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சு கூறியுள்ளது.

இதற்கு முன்னர் நிலவிய வறட்சியினால் 64,088 ஏக்கர் நெற்செய்கை பாதிக்கப்பட்டதாக விவசாய அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

பாதிப்படைந்த செய்கை நிலங்களுக்கான இழப்பீட்டை வழங்க உடனடியாக நடவடிக்கை எடுக்குமாறு விவசாய மற்றும் கைத்தொழில் அமைச்சர் மஹிந்த அமரவீரவும் விவசாய காப்புறுதி சபையின் தலைவரும் அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்துள்ளனர்.

# துப்பாக்கி முனைக்குக் கருத்துச் சுதந்திரம் துதிபாடியதால் முன்னர் நம் கல்விப் புலம் பாரிய பின்னடைவைச் சந்தித்தது

## பல்கலை மாணவர்கள் வரலாற்றை மீளப் பரிசீலிப்பது சிறந்தது என்கிறார் ஈ. பி.டி.பியின் ஊடகப் பேச்சாளர்




கடந்தகாலங்களில் பேச்சு சுதந்திரம், எழுத்துச் சதந்திரம், கருத்துச் சுதந்திரம் எல்லாம் துப்பாக்கி முனைகளுக்கு துதி பாடியமையால் எமது கல்விப் புலம் பாரிய பின்னடைவுகளை சந்தித்தது என சுட்டிக் காட்டியுள்ள ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் ஊடகப் பேச்சாளர் ஐயாத்துரை ஸ்ரீரங்கேஸ்வரன் இதனை மாணவர் சமூகம் விளங்கிக்கொள்ள வேண்டும் என்றும் வலியுறுத்தியுள்ளார்.

யாழ் ஊடக அமையத்தில் நேற்றைய தினம் ஊடக சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இதனைக் கூறினார்.

பல்கலைக்கழக வரலாற்றை பார்க்கின்றபோது அன்று பல்கலைக்கழகம் வேண்டாம், வளாகம் மட்டுமே போதும் என்று போர்க்கொடி தூக்கியவர்களை கண்டுகொள்ளாத அன்றைய அரசு, தமிழ் மாணவர்களின் நலன்கருதி பல்கலைக்கழகத்தை யாழ்ப்பாணத்தில் நிறுவியது.

அதன்பின்னர் இன்று யாழ்ப்பாணத்துடன் கிளிநொச்சி,வவுனியா எனப் பல்கலைக்கழகம் பரிணாமம் பெற்றிருக்கின்றது. அன்று அதனை எதிர்த்தவர்கள் இந்த போலி தேசியம் பேசும் குழுவினர்தான். இதனை மாணவர் சமூகம் தெளிவாக விளங்கிக்கொள்ள வேண்டும்.

அத்துடன் முற்போக்கு சிந்தனையுடன் போராடிய யாழ் பல்கலைக்கழக மாணவன் விஜிதரன் கடத்தப்பட்டதும் அதற்கு நியாயம் கேட்டு போராடிய விமலேஸ்வரன் பின்னர் காணாமல் போனதும் ஈழ விடுதலை போராட்டத்தில் மாணவர் சமூகத்தின் பங்களிப்பை வெளிப்படுத்தி நிற்கின்றது.

ஆனால் இன்று அழிவு யுத்தம் நிறைவுக்கு வந்தபின்னர் கருத்துச் சுதந்திரம், பேச்சுச் சுதந்திரம், எழுத்துச் சுதந்திரம் என்ற அனைத்தும் இருக்கின்ற நிலையில் மீண்டும் அதை மறுதலிக்கின்ற சூழல் உருவாக. வருகின்றதா என்றஅச்சம்காணப்படுகின்றது.இதனை மாணவர் சமூகம் மறுபரிசீலனை செய்ய வேண்டும் என்பதே எமது எதிர்பார்ப்பாக உள்ளது. - என்றார் அவர்.

கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவோ நாடாளுமன்றமோ இலங்கை மக்களுக்கோ, வடக்கு கிழக்கு கடற்றொழிலாளர்களுக்கோ பாதிப்பான சட்டங்களை உருவாக்க மாட்டார்கள் எனவும் அவர் தெரிவித்தார்.

கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் சட்டத்தின் சில பிரிவுகளை மாற்றம் செய்வது கடற்றொழிலாளர்களுக்கு பாதிப்பை ஏற்படுத்துவதாகக் குற்றம் சாட்டப்படுவது தொடர்பில் ஊடகவியலாளரொருவர் கேள்வி எழுப்பிய போது இதனை அவர் தெரிவித்தார்.

தற்போது சமர்ப்பிக்கபட்ட வரைவு உடனடியாக அமுல்படுத்தப்படாது. அது தொடர்பாக ஆராயப்பட்டு, விவாதங்கள் நடத்தப்பட்டு, திருத்தங்கள் செய்யப்பட்டே அது நிறைவேற்றப்படும்.

மேலும் அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் கட்சியினர் நாடாளுமன்ற சிறப்புரிமையை பயன்படுத்தி நாடாளுமன்றுக்குள் அவதூறு பேசாமல் பொது வெளியில் - நாடாளுமன்றுக்கு வெளியே வந்து - பேச வேண்டும். - எனவும் அவர் தெரிவித்தார்.



# டக்ளஸின் பிறந்தநாளான நேற்று சர்வ மதத் தலைவர்கள் ஆசீர்வாதம்

ஈழ மக்கள் ஜனநாயக கட்சியின் செயலாளர் நாயகமும் கடற்றொழில் அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தாவின் 66 ஆவது பிறந்த தினமான நேற்றுக் காலை சர்வமதத் தலைவர்கள் அமைச்சரை வாழ்த்தி ஆசீர்வாதம் வழங்கினர்.

இந்நிகழ்வில் கலாநிதி சிவஸ்ரீ இராமச்சந்திர குருக்கள் பாபுசர்மா, வண. கலகம தர்மரங்ஸி தேரர், அருட்தந்தை நிசான்குரே, மாளிகாவத்தை பள்ளிவாசல் மௌலவி முஸம்மில் ஆகியோர் கலந்துகொண்டு ஆசீர்வதித்தனர்.




# பாலஸ்தீன மக்களை ஆதரித்து முசலியில் நேற்று ஆர்ப்பாட்டம்

**- மன்னார் நிருபர் -**

பாலஸ்தீனம் மற்றும் காசா பகுதிகளில் இஸ்ரேல் படைகளினால் அப்பாவி பெண்கள் சிறுவர்கள் கொன்று குவிக்க படுவதற்கு எதிராகவும் இஸ்ரவேல் படையினரால் மேற்கொள்ளப்பட்டு வரும் இனவழிப்புக்கு எதிராகவும் நேற்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 1.30 மணியளவில் சிலாவத்துறை சுற்றுவட்ட பகுதியில் ஒன்று கூடிய முஸ்லிம் மக்களால் அடையாள கவனவீர்ப்புப் போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டுள்ளது.

அப்பாவி பொதுமக்கள் மீது நடத்தப்படும் கொடூர யுத்தத்திற்கு எதிராக மௌனமாக இருக்கும் முஸ்லிம் நாடுகள் தங்கள் மௌனத்தை களைந்து ஆதரவு தெரிவிக்க வேண்டும் எனவும், ஐக்கிய நாடுகள் சபையில் அதிக பெரும்பான்மையோடு நிறைவேற்றப்பட்ட இஸ்ரேலுக்கு எதிரான தீர்மானத்தை நடைமுறைப்படுத்த எனவும், யுத்தத்தை உடனடியாக நிறுத்தி சமாதானத்தை நிலை நாட்ட வேண்டும் எனவும் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் கோரிக்கை விடுத்தனர்.

முசலி பகுதியை சேர்ந்த பல நூற்றுக்கணக்கான ஆண்கள்,பெண்கள் சிறுவர்கள் இணைந்து இந்தப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இலங்கை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசாங்கம் இஸ்ரேலுடனான அனைத்து இராஜதந்திர உறவுகளையும் நிறுத்த வேண்டும், இலங்கைக்கான இஸ்ரேலிய தூதரைத் திருப்பி அனுப்ப வேண்டும் என்பன உட்பட பல கோரிக்கைகள் அடங்கிய மகஜர் ஒன்றை ஜனாதி-பதிக்கு அனுப்பி வைக்குமாறு கோரி போராட்டக்காரர்கள் முசலி பிரதேச செயலாளரிடம் கையளித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.














**உரலார் கேள்வி:- அடிக்கடி சர்ச்சைகளுக்கு ஆளாகி வரும், பேச்சாளர் 'சொல்வேந்தர்' சுகி சிவம் அவர்களைப்பற்றி என்ன நினைக் கிறீர்கள்?**

**உலக்கையார் பதில் :-** உங்கள் கேள்வியின் முதல் பகுதியாக இருக்கும் 'அடிக்கடி சர்ச்சைகளுக்கு ஆளாகி வரும்' என்ற விடயம் பற்றிப் பின்னால் வருகிறேன். முதலில் 'சொல்வேந்தர்' பற்றிய என் எண்ணங்களைப் பதிவு செய்கிறேன்.

1981ஆம் ஆண்டு மதுரையில் எம்.ஜி.ஆர். நடத்திய தமிழாராய்ச்சி மாநாட்டில் நடந்த, வழக்காடு மன்றம் ஒன்றில்தான் நான் அவரது பேச்சை முதன் முதலில் கேட்டேன். அந்த வழக்காடு மன்றத்தில் வலம்புரி ஜோனும், சொல்வேந்தரும் வாதாடினார்கள். மிகப்பெரும் அறிஞரான பேராசிரியர் எஸ். இராமகிருஷ்ணன் அம்மன்றிற்குத் தலைமை



தாங்கினார். ஆயிரக்கணக்கானோர் கூடியிருந்த அந்த மாபெரும் சபையில் அன்று 'சொல்வேந்தர்' தனது 'விஸ்வரூபத்தைக்' காட்டினார். அன்று நான் அடைந்த வியப்புக்கு ஓரளவில்லை. பின்னாள்களில் அவரோடு நெருங்கிப் பழகும் வாய்ப்பினை இறைவன் எனக்குத் தந்தான்.

ஒவ்வொரு முறையும் மேடைகளில் 'சொல்வேந்தரின்' பேச்சுக்களைக் கேட்கிறபொழுது, என்னுள் வியப்பு மேலிடும். என் புத்தி அவரிடம் சரணடையும். 'இப்படியும் ஒரு பேச்சா?'என்று என் மனதினுள் நான் வாய்பிளப்பேன்.

இன்று பல தமிழகப் பேச்சாளர்களுடன் தொடர்பில் இருக்கும் நான், யார் என்ன நினைத்தாலும் பரவாயில்லை என்ற முடிவோடு, ஒன்றை இவ்விடத்தில் சொல்ல விரும்புகிறேன். இன்றைக்கு இருக்கும் பேச்சாளர்களுக்குள் தலைமைத் தகுதிக்குரியவர் யார்? என்று என்னைக்கேட்டால், சந்தேகத்திற்கு இடமில்லாமல் அவர் 'சொல்வேந்தர்தான்' என்று உறுதியாய்ச் சொல்வேன்.

எடுத்த தலைப்புக்குள் நின்று, சொல்லால் பொருள் தொடுத்து, உணர்வு ஏற்படுத்துவதில் அவருக்கு நிகர் அவரேதான்! எப்படி இவரால் இப்படியெல்லாம் சிந்திக்க முடிகிறது என்று பல தரம் வியந்திருக்கிறேன்.

அவருக்கு 60 வயது நிறைந்த போது நான் எழுதிய வாழ்த்தில், "நீங்கள் வெறும் பேச்சாளர் அல்லர் ஓர் 'உபதேசியாய்' ஆக வேண்டியவர். இனி அந்த நிலையில்தான் நான் உங்களைக் காண விரும்புகிறேன்" என்று எழுதியதாய் ஞாபகம்.

உண்மையைச் சொல்லப் போனால் 'சொல்வேந்தர்' நம் தமிழ் உலகிற்குக் கிடைத்த பெரும் சொத்து என்பதை யாரும் மறுக்க முடியாது.

இனி உங்களது கேள்வியின் முதற் பகுதிக்கு வருகிறேன்.

'சொல்வேந்தர்' அண்மைக்காலமாய் அடிக்கடி சர்ச்சைகளுக்கு ஆளாகி வருகிறார் என்பது உண்மைதான். அவர் சர்ச்சைக் கருத்துக்களைச் சொல்வது ஒன்றும் புதிதல்ல. ஆனால் அண்மைக் காலமாய் அவர் உண்டாக்கும் சர்ச்சைகள், அவரை இழிவுபடுத்துவதாய் அமைந்து மனதை வேதனை செய்யவே செய்கின்றன.

அண்மைக் காலமாக அவரது பேச்சுக்களில் அறிவுக்கூர்மை மிதமிஞ்சி வெளிப்படுகிறது. என்னைக் கேட்டால், மனித ஆணவத்தின் வெளிப்பாடு அவரவர் அறிவில்தான் கூர்மையுற்று இருக்கிறது என்பேன். அதனால்தானோ என்னவோ? அறிவு கூர்மையுறக் கூர்மையுற ஆணவமும் கூர்மையுற்று விடுகிறது. இதனால்தான் அறிவால் விண்ணைத் தொடும் 'சொல்வேந்தர்' உணர்வால் மண்ணைத் தொட மறுத்து நிற்கிறார்.

எந்த விதையை எந்த நிலத்தில் விதைக்க வேண்டும் என்று தெரியாததும், அந்த விதைப்பில் தன்னை அடையாளப்படுத்த அவர் முயல்வதும் தான், சர்ச்சைகள் அவரைச் சுற்றிச்சுற்றி வருவதற்கான காரணம் என்று நினைக்கிறேன்.

தற்போது அவர் தோற்றத்தில் ஏற்படுத்தியிருக்கும் முதிர்ச்சியைத் தன் பேச்சுகளில் ஏற்படுத்தத் தவறுகிறாரோ என்று வருத்தப்பட வேண்டியிருக்கிறது.

1981 இல் கேட்ட அதே மூர்க்கமான பேச்சைத் தான் இப்போதும் அவரிடம் கேட்க முடிகிறது. வார்த்தை

**(15ஆம் பக்கம் பார்க்க)**

(14ஆம் பக்கத் தொடர்ச்சி)

களிலும், வார்த்தைகளை வெளிப்படுத்தும் போது காட்டும் மெய்ப்பாடுகளிலும் அவரிடம் தெரியும் மிதமிஞ்சிய தேவையில்லாத 'நான்' எனும் நிமிர்வு கேட்போரை அவரிடம் இருந்து சற்று விலகச் செய்யுமாற்போல் தோன்றுகிறது.

'மன்னவனும் நீயோ வளநாடும் உனதோ? உன்னையறிந்தோ நான் தமிழை ஓதினேன்' – என்ற கம்பரின் திமிரை மட்டும் ரசிப்பீர்கள். என் திமிர் மட்டும் உங்களுக்கு கசக்கிறதா என்று ஒருவேளை 'சொல்வேந்தர்' கேட்கக்கூடும். கம்பன் தனது புலமை இழிவு செய்யப்பட்டபோது மட்டும் தான் திமிர் காட்டினான். திமிர் காட்டுவதையே புலமையின் அடையாளமாய் அவன் என்றும் செய்ததில்லை. அவனது அவையடக்கப்பாடல்கள் அதனை உணர்த்தும்.

இவ்வளவு காலமாய், இவ்வளவு பேச்சுகளைப் பேசிய அனுபவத்தினால் 'சொல்வேந்தரது' வார்த்தைகளும் கருத்தும் கனிந்திருக்க வேண்டாமா? அப்படி நிகழ்வதாய்த் தெரியவில்லை.

அவர 'தன்முனைப்பால்' கனியத் தவறுகிறாரோ என்று எண்ணத் தோன்றுகிறது. அது கவலையும் தருகிறது!

அவரது இந்தப் போக்கில் எனக்கு உடன்பாடு இல்லை. பல இடங்களில் உண்மையை நிமிர்வாய்ச் சொல்வதாய் நினைந்து, அவர் பேச்சில் காட்டும் 'மூர்க்கம்' அவரது வயதிற்குப் பொருத்தமானதாய் இல்லை. அனைவரையும் தன்வசப்படுத்த எண்ணி அமிர்தத்தையும் பாராட்டுகிறார். விஷத்தையும் அங்கீகரிக்கிறார். இத்தகைய முரண்பாட்டுப் பேச்சுக்கள் கவனத்தை ஈர்க்க மட்டுமே பயன்படும். அவை கண்ணியத்தைப் பெற்றுத்தரா என்பது மட்டும் நிச்சயம்.

சுவை மிகுந்த மரத்தின் காயானாலும் காலத்தால் கனிந்தால் தான் அது மதிப்புப் பெறும். காலத்தால் கனிய மறுக்கும் காய் ஒன்று முடிவில் வெம்பிய பழமாகிப் பயனற்று வீழ்வது தவிர்க்க முடியாத ஒன்றாம்

என்னைப் பொறுத்தவரை 'சொல்வேந்தர்' இனி, தானும் கனிந்து, சபைகளையும் கனியச்செய்ய வேண்டும். இந்த வயதில் அவர் சபைகளில் கைதட்டுக்களை வாங்குவதை விட மனம் நெகிழ்ந்த கண்ணீரை வாங்குவதுதான் சிறந்தது என்று படுகிறது.

இலக்கியமும், பக்தியும்தான் இதுவரை அவர் நின்று விளையாடி வெற்றி கொண்ட மைதானங்கள். அந்த மைதானங்கள்தான் அவரின் இந்த அளவு உயர்வான வெற்றிக்குக் காரணங்களாகின. அதை அவர் மறத்தலாகாது! அண்மைக்காலமாய் அவர் வேறு மைதானங்களில் விளையாட நினைந்து தன்னை வளர்த்த மைதானங்களைச் சிதைக்கத் தொடங்கி இருப்பதாய்ப் பலரும் நினைக்கத் தொடங்கியிருக்கிறார்கள்.

சமூகத்தைச் சீர் செய்வதுதான் தன் வேலை என்று, தனது புதிய கருத்துகளுக்கு 'சொல்வேந்தர்' அரண் செய்ய நினைக்கிறார். அது எனக்குச் சரியாய்ப் படவில்லை. இத்தகைய சிந்தனையாளருக்குப் புத்தி சொல்ல நான் யார்? ஆனாலும் நினைவில் வரும் இரண்டு பாரதி பாடல்களை இவ்விடத்தில் பதிவு செய்யத் தோன்றுகிறது.

✦ தெளிவுறவே அறிந்திடுதல் தெளிவு தர மொழிந்திடுதல் சிந்திப்பார்க்கே
களிவளர உள்ளத்தில் ஆனந்தக் கனவு பல காட்டல் கண்ணீர்த்
துளி வர உள்ளுருக்குதல் இங்கிவையெல்லாம் நீ அருளும் தொழில்களன்றோ
ஒளி வளரும் தமிழ் வாணி அடியனேற்கு இவை அனைத்தும் உதவுவாயே.

✦ நானெனும் ஆணவம் தள்ளலும் இந்த ஞாலத்தைத் தானெனக் கொள்ளலும்
பரமோன நிலையில் நடத்தலும் ஒரு மூவகைக் காலம் கடத்தலும்
நடுவான கருமங்கள் செய்தலும் உயிர் யாவிற்கும் நல்லருள் பெய்தலும்
பிறர் ஊனைச் சிதைத்திடும் போதிலும் தனதுள்ளம் அருளின் நெகுதலும்
இவை தாயின் வயிற்றிற் பிறந்தன்றே தமைச் சார்ந்து விளங்கப் பெறுவரேல்
இந்தமாயிரு ஞாலம் அவர்தமைத் தெய்வ மாண்புடையார் என்று போற்றுங்காண்.

– பாரதியாரின் இப் பாடல்களைச் சொல்வேந்தரின் சிந்தனைக்காய்ச் சமர்ப்பிக்கின்றேன்.

விடை நீள்வது தெரிந்தாலும் ஒன்றைச் சொல்லாமல் எனது கருத்தை முடிக்க விரும்பவில்லை. 'சொல்வேந்தர்' நம் தமிழினத்துக்குக் கிடைத்த ஓர் அரிய அறிவுச் சொத்து. அவரது போக்கில் சிறிது தளர்வு ஏற்பட்டால் அதைச் சீர்செய்து நம் சொத்தைக் காக்க வேண்டிய பொறுப்பு நம் இனத்தாருக்கு உண்டு.

இன்று அவரது தளர்ச்சியைப் பயன்படுத்தி, பலர் அவரை இழிவு செய்ய முனைகின்றனர். அது மாபெரும் தவறு. மேடைகளில் சொல்வேந்தரைத் தாழ்த்தி உரைத்துக் கைதட்டுக்கள் வாங்க நினைப்பது பொருத்தமான செயலில்லை. 'பிழுக்கை வாரியும் பால்கொள்வர்'என்ற தேவார அடியை நாம் மறக்கலாகாது

**சல்லடையாரின் சலிப்பு :-வாரிதியாரை நான் வழி மொழிகிறேன்**

❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖

**உரலார் கேள்வி:- இந்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் அவர்களின் இலங்கை விஜயம்பற்றி என்ன நினைக்கிறீர்கள்?**

**உலக்கையார் பதில் :-** இந்திராகாந்தி, ஜெயலலிதா போன்றோர்க்குப் பிறகு தனது ஆளுமையினால் என் மனம் பதிந்து வருபவர் நிர்மலா அம்மையார் அவர்கள். தனது இலங்கை விஜயத்



தில், வெளிப்படையாய் நிமிர்வோடு தமிழர்களை அணுகித் திருப்தி செய்தார். அதே நிமிர்வோடு மறைமுகமாய் இலங்கைத் தலைவர்களையும் கையாண்டிருப்பார் என்று ஊகிக்க முடிகிறது.

இலங்கை மீதான சீனாவின் அழுத்தங்களுக்கு அவரது விஜயம், நிச்சயம் முட்டுக்கட்டையிட்டிருக்கும். ஏறச் சொன்னால் கழுதைக்குக் கோபம் இறங்கச் சொன்னால் முடவனுக்கு கோபம் என்ற நிலையில், எவரைத் திருப்தி செய்வது என்று தெரியாமல் நம் ஜனாதிபதி 'முழி பிரட்டுவார்' என்று நினைக்கிறேன்.

நிர்மலா சீதாராமன் திருகோணமலையில் வங்கிக் கிளை திறக்கவும், யாழ்ப்பாணத்தில் நல்லூரைத் தரிசிக்கவும் மட்டும் வரவில்லை என்பது நிச்சயமான உண்மை.

**சல்லடையாரின் சலிப்பு :- அன்னையின் வரவு ஈழத்தமிழர்களுக்கு 'நல்லன எல்லாம் தருவதாகட்டும்'**

❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖

(16ஆம் பக்கம் பார்க்க)

(15ஆம் பக்கத் தொடர்ச்சி)

**உரலார் கேள்வி:- யாழ்ப்பாணத்தில் விமர்சனத் திற்கு ஆளாகி இருக்கும் 'தலையா?', தள பதியா?' என்ற 'சொற்சமர்'பற்றிய உங்கள் கருத்து?**

**உலக்கையார் பதில் :-**'டான்'டிவியில் 'செந்த மிழ்ச் சொல்லருவி' லலீசன் அவர்கள் தலைமை தாங்க, மாணவர்களால் மேற்படி விவாதம் நடாத் தப்பட்டதாக அறிந்தேன். நடுவரின் தீர்ப்பின் ஒரு பகுதியை மட்டும் கேட்க முடிந்தது. இன்று வரை அந்நிகழ்வை முழுதாய் கேட்கக் கிடைக்கவில்லை.

சரியோ? பிழையோ? சினிமா இன்றைய இளை யோரின் வாழ்வின் வலிமையான ஒரு பகுதி யாய் மாறிவிட்டது. என்றுமில்லாத வகையில் நம் நாட்டில் கூட, கதாநாயகர்களின் கட்அவுட்டிற்கு பால் அபிஷேகங்கள் நடாத்தத் தொடங்கி விட்ட னர். போராட்டம் முடிந்த பிறகு, தமிழ் நாட்டி லிருந்து பல கெட்ட காற்றுக்கள் நம் மண்ணில் வீசத் தொடங்கி விட்டன. தடுப்பது கடினம் தான்!



ஆனால் அறிஞர்கள் அக் காற்றில் அடிபட்டுப் போகாமல் தம்மைக் காத்துக்கொள்ள வேண்டும்.

சினிமாக் கவர்ச்சியை அடிப்படையாக வைத்தும், படிக்காமல் பேசக்கூடிய வாய்ப்பினை வைத்தும் மேற் சொன்ன தலைப்பினை எடுத்திருப்பார்கள் போல. இவ் விவாதத்தால் சமூகத்திற்குக் கிடைக் கப்போகும் பயன் என்ன என்ற கேள்விதான் சற்று நெருடல் தருகிறது .

இயல், இசை, நாடகம் எனும் முத்தமிழ் துறையில் இயல்துறைக்குச் சமூகம் அதிக மதிப் பளிக்கிறது. இசை நாடகத் துறையில் வல்லமை பெற்றவர்களைக் 'கலைஞர்கள்' என்றே அழைக்கும் சமூகம் இயல்துறையில் வல்லமை பெற்றவர்களை மட்டும் 'அறிஞர்கள்' என்று அழைக்கிறது. காரண மில்லாமல் இயல் துறையாளர்களுக்கு நம் சமூகம் இந்த மதிப்பை அளிக்கவில்லை. அறிவுசார்ந்த இயல் துறையினருக்குச் சமூகத்தை உயர்த்தும் பொறுப்பு இருக்கின்றது.

அப்படியாய் இருந்த இயல் துறையையும் தமிழ்நாடு, பொழுது போக்குத் துறையாய் மாற்றி விட்டது. சேரும் கூட்டமும், கிடைக்கும் கைதட்டலும் மட்டுமே இயல்த் துறையின் பயனாய் மாறிவிட்ட அவலம் அங்கு நிகழ்ந்திருக்கின்றது. அதன் தாக்கம்தான் கடல் கடந்து வந்து, இங்கும் இத் தகைய ஒரு தலைப்பை விவாதத்துக்காய் எடுக்க வைத்திருக்கிறது என்று நினைக்கிறேன்.

கேட்கக் கிடைத்த லலீசனின் தீர்ப்பின் ஓர் பகுதி யில், அவர் நிதானமாகவே பேசி இருந்தார். வெறும் கவர்ச்சிக்காய் அன்றி, சமூக அக்கறையை அத் தலைப்பிலும் அவர் பதிவாக்க முற்பட்டிருந்தது ரசிக்க வைத்தது. உப்புக் கடல் கடைந்து அமிர்தம் தேடும் முயற்சி அது.

அண்மைக்காலமாய் யாழின் தமிழ், சமயத் துறைகளில், லலீசன் அடையாளப்படுத்தப்பட்ட ஒரு பேச்சாளராய் அங்கீகரிக்கப்பட்டிருக்கிறார். மக்களின் கோபத்திற்குக் காரணம், மாணவர்கள் இத் தலைப்பைத் தொட்டதல்ல, லலீசன் தலைமை தாங்கியதே பலரையும் கோபப்படுத்தியிருக்கிறது.

பலரும் வெளிப்படுத்தும் அக் கோபத்தில் யாழ் மண்ணில் லலீசனுக்கான அங்கீகாரம் வெளிப் படுவதாயும் நினைக்கிறேன். அதை நினைந்து அவர் மகிழலாம்.

நடந்தது ஒன்றும் பெரிய கொலைக் குற்றமல்ல! இது யாழின் இயல் துறையை நெறிப்படுத் தக் கிடைத்த ஓர் வாய்ப்பென்றே கருதுகிறேன். எழுந்திருக்கும் கடுமையான விமர்சனங்கள், நம் தமிழ்மக்கள் சரியான இலக்கியப் பாதையில் பயணிக்கவே விரும்புகிறார்கள் என்பதையே காட்டி நிற்கின்றன. அந்த அளவில் இந்தச் சர்ச்சையை முடித்து விடலாம்.

**சல்லடையாரின் சலிப்பு :- தவறி விழுந்த வர் தம்மையே, பெற்ற தாயும் சிரித்தல் மரபன்றோ...!**

❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖

# மக்கள் பிரதிநிதிகள் இல்லாமல் மாகாணசபைகளை தொடர்ந்து நடத்துவது ஜனநாயத்திற்கு மரண அடி!

## எல்லை நிர்ணய ஆணைக்குழுவின் தலைவர் மஹிந்த தேசப்பிரிய கருத்து

உள்ளூராட்சி சபைத் தேர்தலை ஒத்திவைப்பதில் எல்லை நிர்ணய ஆணைக்குழுவின் அறிக்கை எவ்வித தாக்கத்தையும் ஏற்படுத்தவில்லை என அக்குழுவின் தலைவர் மஹிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார்.



கொழும்பில் ஊடகங்களுக்கு கருத் துரைக்கையிலே எல்லை நிர்ணய ஆணைக்குழுவின் தலைவர் மஹிந்த தேசப்பிரிய இந்தக் கருத்தைத் தெரி வித்துள்ளார்.

அத்துடன், மக்கள் பிரதிநிதிகளை நியமிக்காமல் அதிகாரவர்க்கத்தின் கட்டுப்பாட்டின் கீழ் மாகாணசபைகளை தொடர்ந்து நடத்துவது நாட்டின் ஜன நாயத்திற்கு மரண அடியாகும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

மேலும், அரசமைப்பில் திருத்தங் களை மேற்கொள்வதைத் தவிர வேறு எந்த வகையிலும் அடுத்த வருடம் நடை பெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலை பிற்போடுவதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதன்படி, ஜனாதிபதித் தேர்தலை தொடர்ந்து பிற்போட முடியாது எனவும், 2024 ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 17 ஆம் திகதி முதல் ஒக்டோபர் மாதம் 17 ஆம் திகதி வரையான காலப்பகுதியில் அதனை நடத்தியேயாக வேண்டுமென வும் எல்லை நிர்ணய ஆணைக்குழுவின் தலைவர் மஹிந்த தேசப்பிரிய தெரி வித்துள்ளார்.

# இன்றைய ராசி பலன்கள் - 11.11.2023

## மேஷம்

இன்று உங்களுக்கு சிறப்பான சாதகமான நாள். இது உங்கள் கடின உழைப்பின் மூலம் சாத்தியம் ஆகும்.

உங்கள் பணியாற்றும் திறமைகளை உங்கள் மேலதிகாரிகள் பாராட்டுவர்கள். உங்கள் சக பணியாளர்களுடன் நல்லுறவு காணப்படும்.

உங்கள் துணையுடன் ஒற்றுமையாக இருப்பீர்கள். இதனால் உங்களுக்கு மனதிருப்தி ஏற்படும். உங்கள் துணைக்கு மகிழ்ச்சி கிட்டும்.

எதிர்பாராத பணவரவு காணப்படும். இதனால் உங்கள் சேமிப்பு உயரும்.

இன்று ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். தியானம் மேற்கொள்வதன் மூலம் ஆரோக்கியத்தை சிறப்பாக்கலாம்.

## ரிஷபம்

இன்று மனக்குழப்பத்துடன் காணப்படுவீர்கள். இதனால் ஆரோக்கியமற்ற மண் நிலையும் வேதனையும் காணப்படும். பிரார்தனை மற்றும் இசை கேப்டதன் மூலம் ஆறுதல் பெறலாம்.

பணியிடத்தில் சில சவால்கள் நிறைந்திருக்கும். சிறப்பாக திட்டமிட்டு பணியாற்றினால் உங்கள் செயல்திறன் சிறப்பான நிலையில் இருக்கும்.

உங்கள் பதட்டமான மனநிலையை உங்கள் துணையிடம் காண்பிப்பீர்கள். இது உறவின் நல்லிணக்கத்தை பாதிக்கும்.

பண வரவு குறைந்து காணப்படும். உங்கள் பிரியமான ஒருவரின் ஆரோக்கியத்திற்காக நீங்கள் பணம் செலவு செய்ய வேண்டிய கட்டாயம் ஏற்படும்.

உங்கள் ஆரோக்கியத்தில் கவனம் செலுத்த வேண்டும். செரிமானப் பிரச்சினைகள் ஏற்பட வாய்ப்புள்ளது. சரிவிகித உணவு சிறந்த பலன் தரும்.

## மிதுனம்

இன்று வருத்தங்களை ஒதுக்கித் தள்ளுங்கள் அமைதியாக இருக்க வேண்டும். வெற்றிக்கான முயற்சியை எடுக்க வேண்டும்.

உங்கள் செயல்திறனில் அதிருப்தி காணப்படும். அதிகப் பணிகளை கையாள முறையாக திட்டமிட வேண்டும்.

உங்கள் துணையிடம் உணர்சிவசப்படுவீர்கள். இதனால் இருவரிடையேயான புரிந்துணர்வு பாதிக்கப்படும்.

இன்று நிதிநிலைமை ஏமாற்றத்தை அளிக்கும். சேமிப்பது கடினமாக காணப்படும். உங்கள் தாயின் உடல் நலத்திற்காக பணம் செலவு செய்வீர்கள்.

இன்று நீங்கள் பல் வலியால் பாதிக்கப்படலாம். தகுந்த சிகிச்சை மேற்கொள்வது சிறந்தது.

## கடகம்

இன்று சிறிய முயற்சியில் பெரிய விஷயங்களை சாதிப்பீர்கள்.இன்று உங்களிடம் நம்பிக்கை நிறைந்து காணப்படும்.

இன்று முக்கிய சந்திப்புகளில் பங்கு பெற நேரலாம். உங்கள் மேலதிகாரிகள் இந்த சந்திப்பில் நீங்கள் பங்கு பெறும்முறை, உங்கள் கருத்து மற்றும் உங்கள் தகவல் பரிமாற்றம் கண்டு ஈர்க்கப்படுவார்கள்.

உங்கள் துணையிடம் நட்புடன் பழகுவீர்கள். இதனால் உறவில் மகிழ்ச்சி நிலவும்.

உங்கள் கடின உழைப்பு மற்றும் முயற்சி மூலம் இன்று பணவரவு காணப்படும். இன்று புதிய முதலீடுகளை செய்ய இயலும்.

இன்று உங்களிடம் காணப்படும் மகிழ்ச்சி காரணமாக உங்கள் ஆரோக்கியத்தை ஸ்திரமாக பராமரிப்பீர்கள்.

## சிம்மம்

உங்கள் முயற்சிகளில் வெற்றி காண நீங்கள் திட்டமிட்டு செயலாற்ற வேண்டும். ஆன்மீக ஈடுபாடு உங்களுக்கு ஆறுதலையும் திருப்தியையும் அளிக்கும்.

உங்கள் மேலதிகாரிகளுடன் நல்லுறவு காணப்படாது. அவர்களால் சில தொல்லைகள் ஏற்படும். இது உங்களுக்கு கவலையை ஏற்படுத்தும்.

உங்கள் துணையிடம் தேவையற்ற வார்த்தைகளை பேசுவதை தவிர்க்க வேண்டும். இதன் மூலம் நல்ல புரிந்துணர்வை ஏற்படுத்த இயலும்.

இன்று தேவையற்ற செலவுகள் அதிகமாக காணப்படும். அதனால் பணம் அதிகமாக செலவாகும்.

தோல் சம்பந்தமான பிரச்சினை காணப்படும். எண்ணெய் பதார்த்தங்கள் உண்பதை தவிர்க்கவும்.

## கன்னி

இன்று பதட்டப்படாமல் சமநிலையோடு இருங்கள். உங்கள் வளர்ச்சியில் ஏற்படும் தடைகளை நம்பிக்கையோடு சமாளிக்க வேண்டும்.

அதிகப் பணிகள் காரணமாக உங்களால் பணிகளை குறித்தநேரத்தில் முடிக்க இயலாது. உங்கள் சகபணியாளர்களுடன் நல்லுறவு காணப்படாது. இன்று நீங்கள் சந்திப்புகளில் கலந்து கொள்வதில் மும்மரமாக இருப்பீர்கள்.

உங்கள் துணையுடன் சிறு பிரச்சினை காரணமாக தவறான புரிந்துணர்வு காணப்படும். இதனைப் போக்க மனம் திறந்து பேச வேண்டும். அதன் மூலம் நல்ல புரிந்துணர்வை ஏற்படுத்தலாம்.

இன்று பணம் சம்பாதிக்கும் ஆற்றல் குறைந்து காணப்படும். பணத்தை கவனமாகக் கையாள வேண்டும். அதிக செலவுகள் காணப்படும்.

## துலாம்

இன்றைய சூழ் நிலையில் நீங்கள் விழிப்புடனும் எச்சரிக்கையுடனும் இருக்க வேண்டும். தியானம் சிறந்த பலனைத் தரும். நம்பிக்கை அணுகுமுறை மேற்கொள்ளுங்கள்.

அதிகப் பணிகள் காணப்படும். பணிகளை குறித்தநேரத்தில் முடிக்க முறையாக திட்டமிட்டு பணியாற்ற வேண்டும்.

உங்கள் துணையுடனான உறவில் நல்ல புரிந்துணர்வும் நல்லிணக்கமும் ஏற்பட நட்பான அணுகுமுறை மேற்கொள்ள வேண்டும்.

பயணத்தின்போது பண இழப்பு காணப்படுகின்றது. பணத்தை கவனமாகக் கையாள வேண்டும்.

தலைவலி மற்றும் கால் வலி ஏற்பட வாய்ப்புள்ளது. அமைதியான போக்கு சிறந்த பயன் அளிக்கும்.

## விருச்சிகம்

வெற்றிகளை பெற்றுத் தரக்கூடிய உறுதியான முடிவுகளை எடுப்பீர்கள். கடினமான பணிகளை எளிதாக முடிப்பீர்கள். உங்கள் நண்பர்கள் உங்களுக்கு ஆதரவாக இருப்பார்கள்.

பணியில் உங்கள் திறமைகளை வெளிப்படுத்துவீர்கள்.இதனால் உங்கள் பணிகளை குறித்தநேரத்தில் முடிப்பீர்கள்.

இன்று உங்கள் துணையுடன் இனிமையான தருணங்களை அனுபவித்து மகிழ்வீர்கள். இருவரும் பரஸ்பரம் கருத்துக்களை பரிமாறிக் கொள்வதன் மூலம் நல்ல புரிந்துணர்வு ஏற்படும்.

இன்று நிதிநிலை சிறப்பாக இருக்கும். உங்கள் ஆற்றல் அதிகரிக்கும். உங்கள் வங்கியிருப்பு அதிகமாக இருக்கும் காரணத்தால் நீங்கள் பயனுள்ள முதலீடு செய்ய நினைப்பீர்கள்.

# இன்றைய ராசி பலன்கள் - 11.11.2023




இன்று மகிழ்ச்சியான நிகழ்வுகள் ஏற்படலாம். உங்கள் முன்னேற்றத் திற்காக நேரம் செலவு செய்வீர்கள். உங்கள் மென்மையான பேச்சு உங்கள் வெற்றிக்கு சாதகமாக இருக்கும்.

பணியிடச் சூழல் நல்ல பலனளிக்கும் வகையில் சாதகமாக இருக்கும். உங்கள் பணிகளை குறித்தநேரத்தில் முடிப்பீர்கள். வேலை தொடர்பான பயணம் உங்களுக்கு நல்ல பலனளிக்கும்.

உங்கள் இனிமையான வார்த்தை மூலம் இன்று உங்கள் துணையுடன் மகிழ்ச்சியான சூழல் காணப்படும். இதனால் இருவரிடையே நல்ல புரிந்துணர்வும் அன்புன் பெருகும்.

இன்று பண வரவு அதிகமாக இருக்கும். சிறிய கடன் வகையில் இன்று பணம் பெருவீர்கள்.

உங்களிடம் காணப்படும் ஆற்றல் மற்றும் மனஉறுதி காரணமாகஇன்று ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




இன்று கவலையுடன் காணப்படு வீர்கள். அதனால் உங்களால் சிறப் பாக செயலாற்ற இயலாது. உங்கள் செயல்களை சாதரண போக்கில் எடுத் துக் கொள்ள வேண்டும்.

இன்று தன்னம்பிக்கை குறைந்து காணப்படுவதால் சிறப்பாக பணியாற்ற இயலாது. முறையாக திட்டமிட்டால் பணிகளை சிறப்பாக கையாளலாம்.

இன்று உங்களிடம் மன உறுதி குறைந்து காணப்படும். இதனை உங்கள் துணையிடம் வெளிப்படுத்துவீர்கள். இதனால் உறவின் நல்லிணக்கம் பாதிக்கப்படும்.

இன்று நிதிநிலைமை ஏமாற்றத்தை அளிக்கும். உங்கள் தேவைகளை பூர்த்தி செய்வதும் சேமிப்பதும் கடினமாக உணர்வீர்கள்.

இன்று முதுகுவலி ஏற்படலாம். தகுந்த மருத்துவ சிகிச்சை மற்றும் மருந்து மூலம் குணமாகும்.





இன்று கோவில் சென்று சம்பிரதாய முறைப் படி வழிபாட்டில் ஈடுபடுவீர்கள். இதன் மூலம் அமைதியும் மகிழ்ச்சியும் கிடைக்கும். இன்று முக்கிய முடிவுகள் எடுப்பதை தள்ளிப் போடவும்.

இன்று பணிகள் அதிகமாக காணப்படும் முறையாக திட்டமிட்டு ஒழுங்கமைப்பதன் மூலம் சிறப்பாக பணிகளைக் கையாளலாம்.

உங்கள் துணையிடம் இன்று தகவல் பரிமாற்ற சிக்கல் காணப்படும். அனுசரித்து புரிந்து கொள்வதன் மூலம் நல்லிணக்கம் ஏற்படுத்த இயலும்.

இன்று செலவுகள் அதிகமாக இருக்கும். உங்கள் தேவைகளை பூர்த்தி செய்ய சிறிய அளவில் கடன் வாங்குவீர்கள்.

கண் எரிச்சல் ஏற்பட வாய்ப்புள்ளதால் கண்களுக்கு சிகிச்சை மேற்கொள்வது சிறந்தது.




உங்கள் அர்ப்பணிப்பு மற்றும் முயற்சி மூலம் முன்னேற்றகரமான பலன்கள் கிடைக்கும். உங்கள் திறமைக் கான புகழ் பெறுவீர்கள். உங்களுள் மறைந்திருக்கும் ஆற்றல் வெளிப்படும்.

உங்கள் திடமான முயற்சி மூலம் நீங்கள் சாதகமான பலன்களைப் பெறலாம். உங்கள் திறமை மற்றும் தகுது காரணமாக நீங்கள் சிறப்பாக பணியாற்றுவீர்கள்.

உற்சாகமான போக்கை கடைபிடிப்பதன் மூலம் உங்கள் துணையுடன் அன்பான தருணங்களை அனுபவிக்க லாம். இதனால் இனிமையும் மகிழ்ச்சியும் ஏற்படும்.

இன்று நிதி வளர்ச்சி சிறப்பாக காணப்படும். சேமிப் பும் அதிகமாக காணப்படும்.

இன்று சிறந்த ஆரோக்கியம் காணப்படுகின் றது. உங்கள் மன உறுதி காரணமாக திடமாக இருப்பீர் கள்.




Discover the Ultimate Investment & Dynamic Destinations which Redefines the Face of Luxurious Living

OUR ONGOING PROJECTS
- No.06, 19th Lane, Colombo 03.
- No. 15A, Layards Rd, Colombo 04.
- No.30, Hotel Road, Mount Lavinia.
- No. 02, Glenfall Road, Nuwara Eliya.
- No.01, Havelock Place, Colombo 05.
- No. 34/2, De Saram Road, Mount Lavinia.
- No. 358, High Level Road, Nugegoda.
- No. 35, Ramakrishna Road, Colombo 06.



Blue Ocean GROUP OF COMPANIES | KELSEY HOMES 40 Years Housing Excellence

+94 777 546 546 | +94 770 774 774

LARGEST PROPERTY DEVELOPER IN SRI LANKA | No. 9A, De Fonseka Place, Colombo 04, Sri Lanka.

Northern PC Park



வடக்கின் கணினிப்பூங்கா

கணினி உலகில் நம்பகமான சேவையில் 15 வருடங்களுக்கு மேலாக யாழ் மண்ணில்

#10 Muddaskadai Junction, Stanley Road, Jaffna.

info@pcpark.co | www.pcpark.co

Hot Line :- 077 777 1545

077 757 0124 | 075 555 7327 | 021 567 5566 | 021 222 9581

077 336 6443 | 071 777 2377 | 021 222 2050 | 021 222 0388

Northern Pc Park | Npcpark | northernpcpark | Northern PC Park




| உலகக் கிண்ணக் கிரிக்கெட் 2023 - புள்ளி அட்டவணை | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| நிலை | அணிகள் | போ | வெ | தோ | சமன் | மு.அ. | பு | ஓ.ச. |
| 01 | இந்தியா | 8 | 8 | 0 | 0 | 0 | 16 | 2.456 |
| 02 | தென்னாபிரிக்கா | 9 | 7 | 2 | 0 | 0 | 12 | 1.261 |
| 03 | அவுஸ்திரேலியா | 8 | 6 | 2 | 0 | 0 | 12 | 0.861 |
| 04 | நியூஸிலாந்து | 9 | 5 | 4 | 0 | 0 | 10 | 0.743 |
| 05 | பாகிஸ்தான் | 8 | 4 | 4 | 0 | 0 | 8 | -0.036 |
| 06 | ஆப்கானிஸ்தான் | 9 | 4 | 5 | 0 | 0 | 8 | -0.336 |
| 07 | இங்கிலாந்து | 8 | 2 | 6 | 0 | 0 | 4 | -0.885 |
| 08 | பங்களாதேஷ் | 8 | 2 | 6 | 0 | 0 | 4 | -1.142 |
| 09 | இலங்கை | 9 | 2 | 7 | 0 | 0 | 4 | -1.419 |
| 10 | நெதர்லாந்து | 8 | 2 | 6 | 0 | 0 | 4 | -1.638 |

# தென்னாபிரிக்கா வெற்றி ஆப்கான் வெளியேற்றம்

தென்னாபிரிக்காவுக்கு எதிரான ஆட்டத்தில் தோற்ற ஆப்கானிஸ்தான் அணி, உலகக் கிண்ணத் தொடரிலிருந்து வெளியேறியது.

13ஆவது உலகக் கிண்ணக் கிரிக்கெட் தொடர் இந்தியாவில் நடைபெற்று வருகிறது. இந்தத் தொடரில் இதுவரை நடந்து முடிந்துள்ள லீக் ஆட்டங்களின் முடிவில் இந்தியா, தென்னாபிரிக்கா, அவுஸ்திரேலியா அணிகள் அரையிறுதிக்கு முன்னேறி உள்ளன.

மீதமுள்ள ஓர் அரையிறுதி இடத்துக்கு நியூஸிலாந்து, பாகிஸ்தான், ஆப்கானிஸ்தான் அணிகளுக்கு இடையே போட்டி நிலவியது. இதில் அரையிறுதிக்கு முன்னேற நியூஸிலாந்துக்கு அதிக வாய்ப்பு இருந்தது.

இந்நிலையில், ஆப்கானிஸ்தான் அணி, தனது முக்கிய ஆட்டத்தில் தென்னாபிரிக்க அணியை நேற்று எதிர்கொண்டது.

இந்தப் போட்டியில் முதலில் ஆப்கானிஸ்தான் அணி துடுப்பெடுத்தாடியது.

தொடக்க வீரர்களாகக் களமிறங்கிய குர்பாஸ், இப்ராஹிம் இருவரும் முறையே 25 ஓட்டங்கள் மற்றும் 15 ஓட்டங்களைச் சேர்த்து ஆட்டமிழந்தனர்.

பின்னர் வந்த ரஹ்மத் ஷா மற்றும் நூர் அஹமது ஆகியோர் தலா 26 ஓட்டங்கள் சேர்த்தனர்.

ஒரு பக்கம் விக்கெட்டுகள் வீழ்ந்தாலும் மறுமுனையில் சிறப்பாக ஆடிய ஒமர்சாய் 97 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காமல் இருந்தார்.

இறுதியில் ஆப்கானிஸ்தான் அணி, 50 ஓவர்கள் முடிவில் 244 ஓட்டங்களைச் சேர்த்து அனைத்து விக்கெட்டுகளையும் இழந்தது.

பின்னர் 245 ஓட்டங்கள் சேர்த்தால் வெற்றி என்ற இலக்குடன் தென்னாபிரிக்கா களமிறங்கியது.

தொடக்க வீரரர்களாகக் களமிறங்கிய குயின்டன் டி கொக் 41 ஓட்டங்களையும் டெம்பா பவுமா 23 ஓட்டங்களையும் சேர்த்து ஆட்டமிழந்தனர்.

47.3 ஓவர்கள் முடிவில் தென்னாபிரிக்க அணி 5 விக்கெட்டுகள் இழப்புக்கு 247 ஓட்டங்களைச் சேர்த்து இலக்கைப் கடந்தது.

இதையடுத்து 5 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் ஆப்கானிஸ்தானை வீழ்த்தி தென்னாபிரிக்கா வெற்றிபெற்றது.

தென்னாபிரிக்காவின் ரசி வான்டர் டுசன் 76 ஓட்டங்களுடனும் பெலக்வாயோ 39 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காமல் களத்தில் நின்றனர்.

ஆட்டநாயகனாக தென்னாபிரிக்காவின் ரசி வான்டர் டுசன் தெரிவானார்.